Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 10.00

நமது

ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

யாழ்.நகரில் தனித்துவமான
கலைநயம் மிக்க துல்லியமான
அச்சுவேலைகளுக்கு
SP சிறந்த இடம்
சுருபி மதிபகம்
267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 மாசி 13 ஹிஜ்ரி 1426 முகர்ரம் 31 (02.03.2006) வியாழக்கிழமை இதழ் 152

போர்நிறுத்த உடன்பாடு திருத்தமா?

இலங்கை அரசின் பொய்ப் பிரசாரம்

விடுதலைப் புலிகள் கடும் கண்டனம்!

லண்டன்

ஜெனிவா பேச்சுக்களை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய இலங்கை அரசுப் பிரதிநிதிகள் - போர் நிறுத்த உடன்பாட்டில் திருத்தம் செய்திருப்பதாக வெளியிட்டிருக்கும் தகவல் குறித்து கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்துள்ள விடுதலைப் புலிகள் - இது தொடர்பாக நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாக நேற்று இலங்கை அரசுக்கு தமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு நேரடியாக அனுப்பப்பட்டுள்ள இந்தக் கண்டனக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தமிழ்நெற் இணையத் தளத்துக்கு தகவல் வெளியிடுகையில் -

ஜெனிவா பேச்சுக்களின் பின்னர் வெளியிடப்பட்ட கூட்டறிக்கைக்கு தவறான முறையில் அர்த்தம் கற்பிக்க முயல்வது இருதரப்புக்கும் இடையேயான பரஸ்பர நம்பிக்கையையும் சமாதான முன்னெடுப்புக்களையும் கடுமையாகப் (12 ஆம் பக்கம் பார்க்க)

கிழக்கு ஆயுதக் குழுக்கள் விவகாரத்தில் ராணுவம் உண்மையாக நடக்கவேண்டும்!

கண்காணிப்புக்குழுத் தலைவர் ஹக்ரப் ஹொக்லன்ட்

கொழும்பு

கிழக்கில் ஆயுதக்குழுக்கள் செயற்படுகின்றன என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இராணுவம் இந்த விடயத்தில் உண்மையாக நடந்து கொள்ளவேண்டும் என காட்டமான தொனியில் கருத்து வெளியிட்டுள்ளார் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தற்போதைய தலைவரான ஹக்ரப் ஹொக்லன்ட்.

எதிர்வரும் ஏப்ரல மாதத்துடன் தனது பணியை முடித்துக்கொண்டு நாடு திரும்பவுள்ள ஹொக்லன்ட் - கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு கருத்து வெளியிட்டபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜெனிவா பேச்சுக்களின் முடிவில் இராணுவ உயர் அதிகாரிகள் - உள்ளூர் ஊடகங்களுக்குத் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாகவே அவர் இந்த கடுமையான அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்.

கிழக்கு மாகாணத்தில் இவ்வாறான ஆயுதக் குழுக்கள் செயற்படுகின்றன என்பதை நிரூபிப்பதற்கு எவ்வித ஆதாரங்களும் இல்லையென இந்த இராணுவ அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

இவ்வாறான குழுக்கள் செயற்படுகின்றன என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இராணுவம் இதுவிடயத்தில் உண்மையாக நடந்து கொள்ளவேண்டும் என ஹொக்லன்ட் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஐந்து ஆயுதக்குழுக்கள் செயற்படுவதாக ஜெனிவாவில் நடைபெற்ற பேச்சுக் (12 ஆம் பக்கம் பார்க்க)

குடும்பப் பெண் குத்திக்கொலை: துணை ஆயுதக் குழுத்தலை

குடும்பப் பெண் குத்திக்கொலை; அயல்வீட்டுப் பெண் கைவரிசை!

யாழ்ப்பாணம்

கொக்குவில் பகுதியில் இரண்டு குடும்பங்களுக்கிடையில் ஏற்பட்ட குடும்பத் தகராறு முற்றியதால் ஆத்திரமடைந்த பெண் - தனது எதிரான பெணணை கத்தியால் குத்தி கொலை செய்ததுடன், அவரது மகளையும் வெட்டிக் காயப்படுத்தினர்....

நேற்றுக்காலை 8.30 மணியளவில் கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் தங்கவேலு அன்னலட்சுமி (வயது 55) என்பவர் (12 ஆம் பக்கம் பார்க்க)

துணை ஆயுதக் குழுக்களுடன் தொடர்பு எதுவும் இல்லையாம்!

இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க

கொழும்பு

படையினருக்கும், துணை ஆயுதக்குழுக்களுக்கும் இதுவரை எந்தத் தொடர்பும் இல்லை என்றும் இனிமேலும் தொடர்புகளை வைத்திருக்கப் போவதில்லை எனவும் இராணுவ பேச்சாளர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து வெளிவரும் அச்சு ஊடகமொன்றுக்கு அவர் வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

தீவுச்சேனையில் கருணா குழுவினரது முகாம் இருப்பதாகவும், அங்குள்ள கருணா குழுவினருக்கு இராணுவமே பூரண பாதுகாப்பு வழங்கி வருவதாகவும் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை தாம் முழுமையாக மறுப்பதாகவும அவர் தெரிவித்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)

ஆசிரியர்கள் பயணித்த பஸ்ஸை தடுத்து சோதனையிட்ட கடற்படை!

யாழ்ப்பாணம்

இறுப்பிட்டியிலிருந்து யாழ்.நகர் நோக்கி வந்து கொண்டிருந்த பயணிகள் பஸ்ஸை மறித்த கடற்படையினர் - சுமார் ஒரு மணிநேரத்துக்கு மேலாக சோதனை மேற்கொண்டனர்.

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று நேற்றுப் பிற்பகல் 2.45 மணியளவில் இறுப்பிட்டியில் இருந்து யாழ்.நகர நோக்கி வந்து கொண்டிருந்தபோது புங்குடுதீவு - மடத்துவெளிப் பகுதியில் நின்ற கடற்படையினர் பிற்பகல் 3.05 மணியளவில் மறித்துச் சோதனை மேற்கொண்டனர்.

இந்த பஸ்வண்டியில் கூடுதலாக ஆசிரியர்களே பயணம் மேற்கொள்வது வழக்கம். இந்தச் சோதனை சாவடியைக் கடக்கும் போது ஆசிரியர் அல்லாத ஏனைய பயணிகள இறங்கி சோதனையின் பின் பயணம் மேற்கொள்வது வழக்கம். ஆண் ஆசிரியர்களும் அவ்வாறே பயணத்தை தொடர்கின்றனர்.

எனினும், நேற்று குறிப்பிட்ட பஸ்ஸில் ஆசிரியர்கள் மட்டும பயணம் செய்து கொண்டிருந்தவேளை- சோதனைக்காக ஆண் ஆசிரியர்கள் இறங்கிச் செல்ல ஆசிரியைகள் இறங்காமல் இருந்தனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

ஜெனிவா இணக்கப்பாட்டுக்கமைய அடுத்த கட்டப் பேச்சு நடைபெறும்!

நோர்வே தூதரக அதிகாரி தெரிவிப்பு

கொழும்பு

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் ஜெனிவாவில் காணப்பட்ட இணக்கத்தின் அடிப்படையில் அடுத்தகட்டப் பேச்சுக்கள் நடைபெறும் என இலங்கைக்கான நோர்வே தூதரகத்தின் இரண்டாவது செயலாளர் டொம்னெப்ஸ் கொக் தெரிவித்தார்.

சமாதானமும் மக்கள் சேவைக்குமான அமைப்பு புத்தளத்தில் நேற்று நடத்திய செயலமர்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

(12 ஆம் பக்கம் பார்க்க)

சென்.ஹென்றிஸ் மாணவர் மீதான தாக்குதல்; சிறுவர் உரிமை அமைப்புக்கள் அதிருப்தி!

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்

இளவாலை சென்.ஹென்றியரசர் பாடசாலை மாணவர்கள் இராணுவத்தினரால் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து சிறுவர் உரிமை அமைப்புக்கள் விசாரணை நடத்தாமை தமக்கு கவலையளிப்பதாக யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இளவாலை ஹென்றியரசர் பாடசாலைச் மாணவர்கள் நான்கு முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த போது - வன்னியர் கோவிலடி எனும் இடத்தில் அவர்களை வழிமறித்த இராணுவத்தினர் மூவர் - பற்றைகளை வெட்டுமாறு வற்புறுத்தியதுடன், மறுத்த மாணவர்களை மிகவும் கடுமையாகத் தாக்கியுமுள்ளனர்.

இதனால் படுகாயமடைந்த 13 வயதுடைய ஜேம்ஸ் நிரோஷன் எனும் மாணவன் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் -

இலங்கைத்தீவில் சமாதானத்துக்கான பேச்சுக்கள் சுவிஸ் தலைநகரான ஜெனிவாவில் இடம்பெற்ற மறுநாள் - இந்த மாணவர்கள் மீது இராணுவத்தினர் கண்மூடித்தனமாக சப்பாத்துக் கால்களாலும், பொல்லுகளாலும் தாக்கியமையானது சர்வதேச சிறுவர் உரிமைகளை அப்பட்டமாக மீறும் செயலாகும்.

சிறுவர் உரிமைகள் தொடர்பாக கரிசனை காட்டும் சிறுவர் உரிமை அமைப்புக்கள் இதுதொடர்பாக இன்று வரை எந்தவித அக்கறையுமின்றி இருப்பது எமக்குக் கவலையளிக்கிறது.

உண்மையில் சிறுவர் உரிமைகளில் கரிசனையுள்ள அமைப்புக்கள் இது தொடர்பாக பூரண விசாரணை நடத்தி - சம்பந்தப்பட்ட இராணுவத்தினருக்கு எதிராக உடன் நடவடிக்கை எடுப்பதுடன் இராணுவத்தினரின் இந்தச் செயலை சர்வதேச சிறுவர் மனித உரிமை அமைப்புகளின் முன் கொண்டு வர வேண்டும் .

இதனை விடுத்து சிறுவர் மேல் அக்கறை கொண்டவர்கள் போல் - சிறுவர்களை தமிழீழ விடுதலைப் புலிகள் படையில் சேர்க்கிறார்கள் என்ற குற்றச்சாட்டுக்களை விடுத்து, இவ்வாறான பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதன் ஊடாகத்தான் சிறுவர் உரிமைகளைப் பேணமுடியும் என்பதை அனைவரதும் கவனத்துக்கும் கொண்டுவருகிறோம்.

இராணுவத்தினரின் இந்தச் செயற்பாடுகள் தொடர்பாக எதிர்ப்பைக் காட்ட முற்பட்ட பாடசாலை மாணவர்களை ஆயுதமுனையில் தொடர்ந்தும் இராணுவத்தினர் அச்சுறுத்திவருவதானது மீண்டும் யாழ்.குடாநாட்டின் மாணவர் சமூகத்தை ஆக்கிரமிப்பு இராணுவத்துக்கெதிராக செயற்பட வைக்கும் என்பதை தெரியப்படுத்த விரும்புகின்றோம் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டு மாணவர் பிரச்சினை: ஆராய பலாலியில் உயர் மாநாடு!

யாழ்ப்பாணம்

யாழ்.குடாநாட்டு மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராயும் உயர்மட்ட மாநாடு இன்று முற்பகல் 11 மணிக்கு பலாலியில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டுக்கு வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவகம், யாழ்ப்பாணம் ஆகிய கல்வி வலயங்களைச் சேர்ந்த கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி.செ.மகாலிங்கம் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்த மாநாட்டில் உயர்பாதுகாப்பு வலயங்கள் இருக்கும் பாடசாலைகள், இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டிருக்கும் பாடசாலைகள் மற்றும் சோதனைச்சாவடிகளால் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளதாகத் தெரிய வருகிறது.

இந்த மாநாட்டில் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி மற்றும் படையுயர் அதிகாரிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இல்ல மெய்வல்லுநர் போட்டிகள்!

யாழ்ப்பாணம்

தொண்டமனாறு வீரகத்தி மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட சிறுவர் பாதுகாப்பு நிதிய கல்விசார் முகாமையாளர் வைத்திய கலாநிதி அ.பேரின்பநாயகம் பிரதம விருந்தினராகவும் கலந்து கொள்வார்.

★ ★ ★

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரி இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் ஒரு மணிக்கு அதிபர் வன்னியசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் ரி.ராஜலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

★ ★ ★

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் 2 மணிக்கு இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் - யாழ். இந்து மகளிர் கல்லூரி அதிபர் வேதநாயகி பேரின்பநாதன் முதன்மை விருந்தினராகவும், இந்து மகளிர் கல்லூரி உப அதிபர் மீனலோஜினி செல்லையா சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

ஆன்மீக சொற்பொழிவு

யாழ்ப்பாணம்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் நடத்தும் 139 ஆவது ஆன்மீகச் சொற்பொழிவு இன்று மாலை 5மணிக்கு நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் கலைஞானச்சுடர் இராசையா சிறீதரன்ஆன்மீகச் சொற்பொழிவு ஆற்றுவார்.

உளவளத் துணை நிலைய கட்டடத் திறப்பு விழா!

மல்லாகம்

வலி.வடக்கு பிரதேச செயலகத்தால் புதிதாக நிறுவப்பட்ட உளவளத் துணை நிலையத்தின் திறப்பு விழா இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வலி.வடக்கு பிரதேச சபை செயலாளர் என்.முரளிதரன் விருந்தினராகக் கலந்துகொண்டு கட்டடத்தைத் திறந்துவைப்பார். (68)

கலை இலக்கியப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம்

கலாசார மற்றும் தேசிய மரபுரிமைகள் அமைச்சின் ஏற்பாட்டில் இந்த ஆண்டுக்கான தேசிய இலக்கிய கலைப் பெருவிழாவை முன்னிட்டு பிரதேச, மாவட்ட, மாகாண மற்றும் தேசிய ரீதியில் நான்கு கட்டங்களாக இலக்கிய கலைப் போட்டிகளை நடத்த கலாசார அலுவல்கள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

பாடசாலை மாணவர்களுக்காக கட்டுரை, கவிதை, கவிதை விமர்சனம், சிறுகதை, சிறுகதை விமர்சனம் ஆகிய போட்டிகளும் -

திறந்த போட்டியாளர்களுக்காக கவிதை, சிறுகதை, எழுந்தமான கவிதை ஆகிய போட்டிகளும் நடைபெறவுள்ளன.

மேற்படி போட்டிகளில் பங்குபற்றுகின்ற - தென்மராட்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் தத்தமது பாடசாலை அதிபர்களுடனும், திறந்த போட்டியாளர்கள் தென்மராட்சி பிரதேச செயலகத்துடனும் தொடர்பு கொண்டு போட்டிக்குரிய விண்ணப்பப்படிவத்தையும், போட்டி நிபந்தனையையும் பெற்று ஆக்கங்களை எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக -

பிரதேச செயலர், பிரதேச செயலகம், தென்மராட்சி என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பிவைக்குமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (24)

ஐந்து பிரதேச செயலாளர்களுக்கு நிர்வாகசேவை தரம்I பதவியுயர்வு

யாழ்ப்பாணம்

யாழ். குடாநாட்டு பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் ஐந்து பிரதேச செயலாளர்கள் இலங்கை நிர்வாக சேவை தரம் I இற்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளதாக பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

சாவகச்சேரி பிரதேச செயலர் ஸ்ரீனிவாசன், பருத்தித்துறை பிரதேச செயலர் எஸ். வரதீஸ்வரன், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம், உடுவில் பிரதேச செயலாளர் எஸ்.திருவாகரன் மற்றும் முன்னாள் யாழ்ப்பாண பிரதேச செயலாளரும் தற்போதைய சுனாமி மேலதிக அரச அதிபருமான செந்தில் நந்தனன்ஆகியோரே தரம் 1 இற்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு ஜூலை முதலாம் திகதி முதல் இவர்கள் இலங்கை நிர்வாக சேவை தரம் 1 இற்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளதாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிரிக்கெட் சுற்றுப்போட்டி

வடமராட்சி

வடமராட்ச வலய மட்ட பாடசாலைகளுக்கிடையேயான கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்றும் நாளையும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது என வடமராட்சி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.வல்லிபுரம் தெரிவித்தார். (12)

புத்தூர் சோமஸ்கந்த உயர்தர மாணவர் ஒன்று கூடல்

யாழ்ப்பாணம்

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் உயர்தர மாணவர் ஒன்றுகூடல் நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

உயர்தர மாணவர் மன்றத் தலைவர் வை.நிதர்சன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் - கல்லூரியின் பழைய மாணவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளருமான தி.வேல்நம்பியும் அவரது துணைவியார் சஜிதா வேல்நம்பியும் கலந்து கொள்வர்.

SRI LANKA RED CROSS SOCIETY

SRI LANKA RED CROSS SOCIETY
DANISH RED CROSS SOCIETY

Danish Red Cross (DRC) in partnership with Sri Lanka Red Cross Society (SLRCS) is supporting School - based Psychosocial and Health programme for Children in Jaffna district.

Field officer (1)

Must possess the following :

- Degree/diploma in a field relatded to health or psychosocial work or GCE A level with 2 years experience in relevant field.
- Experience with community - based work
- Ability to work independently and in a team.
- Excellent skills in English and Tamil - written and oral.
- Strong computer skills.
- Experience with the Red Cross preferred.
- Posses a valid motorbike drivers license.

Responsibitites include :

- Facilitation and support to project implementation at all levels.
- Assist in participatory planning and project development.
- Monitoring of and support to project components in the field.
- Assistance to implementation of training programs.
- Maintain data of beneficiaries.

The position will be at the SLRCS Jaffna branch.

Starting date : as soon as possible.

Other Requirements for the above positions

High Degree in Computer literacy Excellent command in English, Tamil and Inter personal skills are essential.
Age below 55 Years.

Applications should be submitted no later than 10th of March 2006 to :

The BEO
Sri Lanka Red Cross Society,
73, Kandy road, Jaffna.

[C/5127]

உடன்பாட்டில் செய்த திருத்தங்கள்; அரசாங்கம் வெளியிடவேண்டும்!

ஐ.தே.க கோருகிறது

கொழும்பு

ஜெனிவா பேச்சுக்களின்போது போர்நிறுத்த உடன்படிக்கையில் ஏதேனும் திருத்தம் செய்யப்பட்டிருந்தால் அதுகுறித்து அரசாங்கம் பொதுமக்களுக்கு பகிரங்கப்படுத்தவேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி கோரியுள்ளது.

அத்துடன், சர்வதேச சமூகத்துக்கும் இதுகுறித்து பகிரங்கமாக அறிவிக்கவேண்டும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

பேச்சுக்கள் தொடர்பாக ஒளிவு மறைவின்றி பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்தப்படும் என்று கூறும் அரசாங்கம் – போர்நிறுத்த உடன்படிக்கையில் என்னென்ன திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டது என்பதைத் தெளிவுபடுத்தவேண்டும்.

போர்நிறுத்த உடன்படிக்கையில் எந்தப் பிரிவுகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. எந்தெந்தச் சரத்துக்கள், என்ன நிபந்தனைகள் புதிதாக உருவாக்கப்பட்டன என்பது குறித்து மக்களுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் அரசாங்கம் வெளிப்படுத்தவேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

கடத்தப்பட்ட புனர்வாழ்வுக் கழக ஊழியர்கள் குறித்து எதுவித தகவலும் கிடைக்கவில்லை!

அர்ஜூனன் எதிர்வீரசிங்கம் கவலை தெரிவிப்பு

கொழும்பு

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஊழியர்கள், துணைப்படை என சந்தேகிக்கப்படுபவர்களால் கடத்திச் செல்லப்பட்ட நிலையில், தொடர்ந்தும் அவர்களின் நிலை குறித்து எந்தவிதமான தகவல்களும் தெரிவிக்கப்படவில்லையென கவலை வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த சில வாரங்களாக விரிவான விசாரணைகள் நடத்தப்படுவதாக எமக்குத் தெரிவிக்கப்பட்டபோதும் எந்தவிதமான ஆக்கபூர்வமான பெறுபேறுகளும் இதுவரை கிடைக்கவில்லை என அமைப்பின் ஆலோசகர் அர்ஜூனன் எதிர்வீரசிங்கம் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தகவல் தருகையில் –

இந்தக் கடத்தலில் ஈடுபட்டவர்கள் எம்முடன் எந்தவகையிலும் தொடர்பை ஏற்படுத்தவில்லை.

மனித உரிமைகள் அமைப்புகளும் இந்த விடயம் குறித்து முனைப்பான நடைமுறைகளை மேற்கொண்டுள்ள போதிலும், உரிய தகவல்களை அவர்கள் பெறுவதில் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

இந்த விடயம் குறித்து பொலிஸாரும் எந்தத் தகவலும் தெரிவிக்கவில்லை. இந்தக் கடத்தலின் போது பிரசன்னமாக இருந்த சகல சாட்சிகளையும் பொலிஸார் சந்தித்து விசாரித்துள்ளனர். இது தவிர கடத்தல் சம்பவம் இடம்பெற்ற வெலிக்கந்த பிரதேச சாட்சிகளும் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

எமது ஊழியர்களின் பாதுகாப்பு தொடர்பாகவோ அல்லது அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இடம் குறித்தோ எமக்கு எந்தவிதமான தகவலும் அற்ற நிலையில் நாம் தற்சமயம் இருக்கிறோம் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தக் கடத்தல் தொடர்பாக பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ கருத்துத் தெரிவிக்கையில் –

நான் முன்னர் தெரிவித்தது போன்று இரகசியப் பொலிஸார் இந்த விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த விடயம் தொடர்பான விபரங்களை பொதுமக்களிடம் இருந்தும், முறைப்பாடு செய்தவர்களிடமிருந்தும் ஒத்துழைப்பை நாம் கோருகிறோம்.

இந்தக் கடத்தலைச் செய்தவர்கள் யார் என்பதை நாம் அறியோம். ஆகவே விசாரணைகளை மேற்கொள்பவர்களுக்கு இவர்கள் துப்புத் தந்து உதவவேண்டும் எனத் தெரிவித்தார். (01)

சிங்கள மாணவர்களை யாழ். அனுப்ப

மானிய ஆணைக்குழு முடிவு; தென் பகுதியில் எதிர்ப்பு!

கொழும்பு

யாழ்ப்பாண மருத்துவ பீடத்தில் இருந்து வெளியேறி ஏனைய பல்கலைக்கழக பீடங்களில் கல்வி கற்று வந்த சிங்கள மாணவர்களை மீண்டும் யாழ்ப்பாண பீடத்துக்கு அனுப்புவதற்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு எடுத்த முடிவுக்கு தென்பகுதியில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சிங்கள மருத்துவபீட மாணவர்களை மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பினால், அவர்களது பாதுகாப்பு குறித்து சிக்கல் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளதாக அனைத்து பல்கலைக்கழகங்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று வந்த சிங்கள மாணவர்கள் அங்கிருந்து முன்னர் வெளியேறிய நிலையில், கொழும்பு மருத்துவ பீடத்தில் தமது கல்வியை தொடர்ந்து வந்தனர்.

இந்த வருடத்துக்காக மருத்துவ பீடத்துக்கு தேர்ந்தெடுக்கப்படும் சிங்கள மாணவர்களை யாழ்ப்பாண மருத்துவ பீடத்துக்கு அனுப்ப வேண்டாம் எனவும், அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் துமிந்த நாகமுவ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த விடயம் குறித்து பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் ரஞ்சித் மெண்டிஸ் தகவல் வெளியிடுகையில் – யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கு சிங்கள மாணவர்களை அனுப்பத் தவறும் பட்சத்தில், ஏனைய பல்கலைக்கழங்களின் மாணவர் எண்ணிக்கையை குறைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என தெரிவித்தார்.

இதேவேளை, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தில் முகாமைத்துவ கல்வி கற்று வந்த சிங்கள மற்றும் முஸ்லிம் மாணவர்கள் அச்சம் காரணமாக அங்கிருந்து வெளியேறிய நிலையில், தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் தமது கல்வியைத் தொடர அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

அவர்கள் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் தொடர்ந்து பயில்வதில் எந்தவிதமான பிரச்சினையும் இருக்காதென அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

ஆனால், வவுனியா வளாக முகாமைத்துவ பீடத்தில் கல்வி கற்ற இந்த முகாமைத்துவ மாணவர்களை வேறு பல்கலைக்கழகங்களில் சேர்த்துக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கும் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு – முகாமைத்துவ மாணவர்களுக்கான உரியவசதிகள் ஏனைய பல்கலைக்கழங்களில் இல்லை எனவும் தெரிவித்துள்ளது. (01)

ஆயுதங்களுடன் இருவர் கைது!

கொழும்பு

இரத்மலானை பிரதேசத்தில் துப்பாக்கி மற்றும் கைக்குண்டுடன் நடமாடிய இருவரை கல்கிசை பொலிஸார் கைதுசெய்தனர்.

கடந்த திங்கட்கிழமை இரவு கைது செய்யப்பட்ட 4 சந்தேகநபர்களில் மூன்று பேர் பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்கு முன்னர் இவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு பிணையில் விடுதலையானவர்கள் என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

இந்தச் சந்தேகநபர்களிடமிருந்து உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்றும் கைக்குண்டு ஒன்றும் கைப்பற்றப்பட்டன.

சிவராம் கொலை சந்தேகநபருக்கு விளக்கமறியல் தொடர்ந்தும் நீடிப்பு

கொழும்பு

ஊடகவியலாளர் டி.சிவராம் படுகொலையுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட நபரை எதிர்வரும் 22 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு அவிசாவளை மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஊடகவியலாளர் சிவராம் படுகொலை சம்பந்தமான முறைப்பாட்டை விசாரணைக்கு எடுத்தபோது – சட்டமா அதிபரின் எதிர்ப்பை கவனத்தில் எடுத்த நீதிபதி நிஹால் சில்வா, சந்தேகநபருக்கு பிணை வழங்க மறுப்புத் தெரிவித்து விளக்கமறியலை நீடித்தார்.

2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி ஊடகவியலாளர் சிவராம் பம்பலப்பிட்டியில் வைத்து கடத்திச் செல்லப்பட்டார். மறுநாள் காலை நாடாளுமன்ற வீதியில் சடலமாக அவர் மீட்கப்பட்டார்.

பின்னர், குற்றத்தடுப்பு பொலிஸாரால் ஆறுமுகம் ஸ்ரீஸ்கந்தராஜா என்பவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, கடுவெல நீதிமன்றத்தில் ஆஜர் செயயப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

பொலிஸார் மேற்கொண்டமுறைப்பாட்டுக்கமைய கடுவெல நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்பட்ட அடையாள அணிவகுப்பின்போது சாட்சியாளர்களால் சந்தேக நபர் அடையாளம் காணப்படவில்லையெனத் தெரிவித்து, சந்தேக நபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் 9 மாத காலமாக இவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதால், தகுந்த பிணையில் அவரை விடுதலை செய்யுமாறு கேட்டுள்ளனர்.

ஊடகவியலாளர் சிவராமின் கொலையுடன் சம்பந்தப்பட்டதாகக் கைப்பற்றப்பட்டுள்ள றிவோல்வர் பற்றிய ஆய்வறிக்கை இதுவரை கிடைக்கவில்லையென்றும், விசாரணை நடவடிக்கைகள் முடிவடையவில்லையென்றும், அதனால் சந்தேகநபருக்கு பிணை வழங்குவதை எதிர்ப்பதாகவும், சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றத்துக்குத் தெரிவித்தார்.

இதையடுத்து சந்தேக நபரை எதிர்வரும் 22 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (01)

787 அரச ஊழியர்களின் விண்ணப்பங்கள் நிராகரிப்பு

திருகோணமலை

உள்ளூராட்சிசபைத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்க திருகோணமலை மாவட்டத்தில் விண்ணப்பித்தவர்களின் 787 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டதாக மாவட்டத்தின் உதவி தேர்தல் ஆணையாளர் பண்டார மாபா தெரிவித்தார்.

7 ஆயிரத்து 489 தபால்மூல வாக்களிப்பு விண்ணப்பங்கள் கிடைத்ததுடன், அவற்றில் 10.5 சதவீதம் நிராகரிக்கப்பட்டுள்ளன.

தாமதமாகக் கிடைத்ததன் காரணமாகவே இந்த விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன.

பொதுத்தேர்தலுடன் ஒப்பிடும்போது உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

திருகோணமலையில் தபால் மூலம் வாக்குப்பதிவுகள் எதிர்வரும் 20, 21 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. (01)

விசாரணைக்காக தடுப்புக்காவலில் இருந்த கைதிகள் தப்பியோட்டம்!

கொழும்பு

பாணந்துறை நீதிமன்றத்தால் விசாரணைக்கென தடுத்துவைக்கப்பட்டிருந்த கைதிகள் இருவர் தப்பிச் சென்றனர்.

சிறைக்காவலர்களின் பாகாப்பிலிருந்த இவர்கள் தப்பிச்சென்ற வேளை பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டபோதிலும் கைதிகளைப் பிடிக்கமுடியவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய இந்த சந்தேகநபர்களை பண்டாரவளை பொலிஸார் கைதுசெய்து பாணந்துறை பொலிஸாரிடம் ஒப்படைந்திருந்தனர்.

சிறைச்சாலை பாதுகாப்பு அதிகாரிகளின் உதவியுடனேயே இந்தக் கைதிகள் தப்பிச்சென்றதாக குற்றம்சுமத்திய பொலிஸார் – அவர்களுக்கெதிராகவும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (01)

ஈழத் தமிழர் பிரச்சினை தொடர்பாக அ.தி.மு.க நிலைப்பாடும் ஒன்றுதான்

என்கிறார் திருமாவளவன்

சென்னை

ஈழத் தமிழர் பிரச்சினையில் தமிழக முதல்வர் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.கவுக்கும், எங்களுக்கும் ஒரே நிலைப்பாடுதான் என்று விடுதலைச் சிறுத்தைகளின் பொதுச் செயலாளர் தொல்.திருமாவளவன் தெரிவித்தார்.

இது தொடர்பாக தொல்.திருமாவளவன் கூறியதாவது –

ஈழத்தமிழர் பிரச்சினையில் எங்களுக்கு என்ன நிலைப்பாடு இருக்கிறதோ அதே நிலைப்பாடு அ.தி.மு.கவுக்கும் இருக்கிறது. சமீபத்தில் ஈழத் தமிழ் அகதிகள் வந்தபோது– 1983 ஆம் ஆண்டில் நடந்த இனக்கலவரத்தை அகதிகள் வருகை நினைவுபடுத்தியது என்று ஜெயலலிதா குறிப்பிட்டார்.

ஈழத் தமிழர்களுக்கு எதிராக செயற்படும் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை, தமிழகத்தில் வரவேற்கத் தயாராக இல்லை என்றும் மறுதலித்தார். இந்தப் பிரச்சினையில் அ.தி.மு.க மற்றும் விடுதலைச் சிறுத்தை இயக்க நிலைப்பாட்டில் முரண்பாடு இல்லை.

அதிகாரத்தை பகிர்ந்து கொள்ளத்தான் கூட்டணி வைத்துள்ளோம். கொள்கை வெவ்வேறாக இருக்கலாம்.

இடதுசாரிக் கொள்கைகளை தி.மு.க நிறைவேற்றும் என்றோ அல்லது தி.மு.க கொள்கைகளை இடதுசாரிகள் நிறைவேற்றும் என்றோ அறிவிப்பு செய்து கூட்டணி வைப்பது இல்லை. எனவே கொள்கையில் சமரசத்துக்கு இடமில்லை என்றார் திருமாவளவன்.

சந்தேகநபர்கள் பற்றிய தகவல்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க உத்தரவு!

கொழும்பு

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்கள் தொடர்பான விடயங்களை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் குற்றத் தடுப்பு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

கதிர்காமர் கொலை தொடர்பான சந்தேகத்தின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இருவரை பிணையில் விடுதலை செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டதையடுத்தே நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இருவருக்கும் எதிராக போதுமான சாட்சியங்கள் இல்லாத நிலையில், அவர்களை பிணையில் விடுதலை செய்யுமாறு அவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் நீதிமன்றில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பங்களாதேஷ் அணிக்கு எதிராக இலங்கை அணி 313 ஓட்டங்கள்!



சிட்டகொங்

இலங்கை - பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்டின் இரண்டாம் நாளான நேற்று இலங்கை அணி 6 விக்கெட் இழப்புக்கு 313 ஓட்டங்களைப் பெற்றது.

நேற்று ஆட்டம் ஆரம்பமானபோது பங்களாதேஷ் அணி 9 விக்கெட் இழப்புக்கு 315 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. சதாத் ஹுசைன் 11 ஓட்டங்களுடனும், இனாமுல் ஹக் ஜுனியர் 1 ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

எனினும் இந்த ஜோடியால் வெகுநேரம் தாக்குப்பிடிக்கமுடிவில்லை. இதன்படி சதாத் ஹுசைன் 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க பங்களாதேஷ் அணி 319 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இனாமுல் ஹக் ஜுனியர் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

இதையடுத்து இலங்கை அணி துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது. இதன்படி வண்டோட் - தரங்க ஆரம்ப ஜோடியாக களமிறங்கினர்.

இலங்கை அணிக்கு தொடக்கத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது. இந்த நிலையில் ரஸல் வீசிய பந்தை காலித் மசூத்திடம் பிடிகொடுத்து வண்டோட் ஓட்டமெதையும் பெறாமல் பரிதாபமாக ஆட்டமிழந்தார்.

அடுத்த தரங்கவுடன், சங்ககார ஜோடி சேர்ந்தார். இருவரும் நிதானமாக ஆடி இணைப்பாட்டமாக 86 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் தரங்கவின் விக்கெட் வீழ்த்தப்பட்டது. 57 பந்துகளில் 42 ஓட்டங்களைப் பெற்றிருந்த தரங்க ரபீக்கின் பந்தை அஷ்ரபுல்லிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இந்த நிலையில் ஜெயவர்த்தன களமிங்கினார். 40 பந்துகளில் 30 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஜெயவர்த்தன - ரபீக்கின் பந்தை சதாத் ஹுசைனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்ததார். இதன்போது ஸ்கோர் 149 ஆக இருந்தது.

எனினும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த சங்ககாரவும் சற்றுநேரத்தில் ஆட்டமிழந்தார்.

109 பந்துகளில் 9 பவுண்டரிகள் அடங்கலாக 69 ஓட்டங்களைப் பெற்றிருந்த சங்ககார, இனாமுல் ஹக் ஜுனியரின் பந்தை அஷ்ரபுல்லிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இந்த நிலையில் சமரவீர - டில்சான் ஜோடி களத்திலிருந்தது. எனினும் ஸ்கோர் 178 ஆக இருந்தபோது 32 பந்துகளில் 22 ஓட்டங்களைப் பெற்றிருந்த டில்சான், இனாமுல் ஹக் ஜுனியரின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.



அடுத்து சமரவீரவுடன் - மஃரூப் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடியைப் பிரிக்க பங்களாதேஷ் பந்துவீச்சாளர்கள் கடுமையாகப் போராடினர்.

ஸ்கோர் 295 ஆக இருந்த போது சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிக்கொண்டிருந்த மஃரூப்பின் விக்கெட் வீழ்த்தப்பட்டது. 133 பந்துகளில் 10 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கலாக 72 ஓட்டங்களைப் பெற்ற மஃரூப் - சதாத் ஹுசைனால் போல்ட் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

அடுத்து சமரவீரவுடன் - பண்டார ஜோடி சேர்ந்தார். இந்த நிலையில் இலங்கை அணி 313 ஓட்டங்களைப் பெற்றிக்கையில் நேற்றைய ஆட்டம் முடிவுக்குவந்தது.

சமரவீர 57 ஓட்டங்களுடனும், பண்டார 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தனர்.

பந்துவீச்சில் ரபீக்; இனாமுல் ஹக் ஜுனியர் தலா 2 விக்கெட்டையும், ரசல், சதாத் ஹுசைன் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

விளையாட்டு

இந்தியாவுடனான முதல் டெஸ்ட்: இங்கிலாந்து அணி தடுமாற்றம்!

நாக்பூர்

இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் நேற்று ஆரம்பமான முதலாவது டெஸ்டில் இங்கிலாந்து அணி ஆட்டநேர முடிவில் 7 விக்கெட் இழப்புக்கு 247 ஓட்டங்களைப் பெற்றது.

இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் செய்துள்ள இங்கிலாந்து அணி 3 டெஸ்ட் மற்றும் 7 ஒரு நாள் போட்டிகளில் விளையாடுகிறது.

இதன்படி நேற்று இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி நாக்பூரில் தொடங்கியது.

நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக ஸ்ரரஸும் - ஹொக்கும் களமிறங்கினர்.

இருவரும் இந்திய பந்துவீச்சாளர்களை நிதானமாக எதிர்கொண்டு ஆட்டத்தைத் தொடர்கையில் இங்கிலாந்து அணியின் முதலாவது விக்கெட் வீழ்த்தப்பட்டது.

ஸ்கோர் 56 ஆக இருந்தபோது ஸ்ரீசாந்தின் பந்தை - லக்ஸ்மனிடம் பிடிகொடுத்து ஸ்ரரஸ் ஆட்டமிழந்தார். இவர் 64 பந்துகளில் 28 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

அடுத்து ஹொக்குடன் - பெல் ஜோடி சேர்ந்தார். ஸ்கோர் 81 ஆக இருந்தபோது 28 பந்துகளில் 9 ஓட்டங்களைப் பெற்றிருந்த பெல், ஹர்பஜனின் பந்தை ராவிட்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து பீற்றர்சன் களமிறங்கினார். ஸ்கோர் 110 ஆக இருந்தபோது பீற்றர்சன் - ஸ்ரீசாந்தின் பந்தில் போல்டாகி ஆட்டமிழந்தார். இவர் 33 பந்துகளில் 15 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

அடுத்து ஹொக்குடன் - கொலிங்வூட் ஜோடி சேர்ந்தார். இந்த நிலையில் 160 பந்துகளில் 60 ஓட்டங்களைப் பெற்றிந்த ஹொக் - பதானின் பந்தில் போல்டாகி ஆட்டமிழந்தார்.

இந்த நிலையில் கொலிங்வூட்டுடன் ஜோடி சேர்ந்தார் பிளின்ரொப். இருவரும் நிதானமாக ஆடி ஸ்கோரை உயர்த்தினர். எனினும் ஸ்கோர் 204 ஆக இருந்தபோது பிளின்ரொப் - கும்ளேயின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். இவர் 70 பந்துகளை எதிர்கொண்டு 43 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

அடுத்து களமிறங்கிய ஜோன்ஸ், பிளெக்வெல் முறையே 14, 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

இந்த நிலையில் நேற்றைய ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 246 ஓட்டங்களைப் பெற்றது. கொலிங்வூட் 53 ஓட்டங்களுடனும், ஹொகாட் ஓட்டமெதையும் பெறாமலும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

பந்துவீச்சில் பதான் 3, ஸ்ரீசாந்த் 2, ஹர்பஜன் சிங், கும்ளே தலா 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி 91 ஓட்டங்களால் தோல்வி!

வெலிங்டன்

நியூஸிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையில் நேற்று இடம்பெற்ற நான்காவது சர்வதேச ஒருநாள் போட்டியில் நியூஸிலாந்து அணி 91 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பைத் தேர்ந்தெடுத்தது. இதனையடுத்து நியூஸிலாந்து அணி துடுப்பெடுத்தாடியது. அந்த அணி சார்பாக வின்சென்ட், பிளெமிங் இருவரும் ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கினர்.

இவர்கள் இருவரும் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் பந்து வீச்சுக்களை ஆரம்பம் முதலே துவம்சம் செய்து தமது அணிக்கு நல்லதொரு அடித்தளத்தை இட்டனர்.

இவர்களது விக்கெட்டை மேற்கிந்தியப் பந்து வீச்சாளர்களால் வீழ்த்த முடியாமல்போனது. இந்த நிலையில் அணி 106 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் 59 பந்துகளில் 4 சிக்ஸர்கள், 6 பவுண்டரிகள் அடங்கலாக 67 ஓட்டங்களைப் பெற்றிருந்த பிளெமிங் ஆட்டமிழந்தார்.

இதனையடுத்து, அஸ்ரில் களமிறங்கினார். இந்த ஜோடியும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடியதால் அணியின் ஓட்ட எண்ணிக்கை விரைவாக அதிகரித்தது.

இந்த நிலையில் வின்சென்ட் சிறப்பாக ஆடி தனது இரண்டாவது சதத்தைப் பூர்த்திசெய்தார். மறுமுனையில் நின்ற அஸ்ரில் - அணி 262 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில், 81 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து ரெய்லர் களமிறங்கியபோதிலும், அணி மேலதிகமாகப் 12 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் 102 ஓட்டங்களுடன் வின்சென்ட் ஆட்டமிழந்தார்.

இவரைத் தொடந்து ஸ்ரைஸ் களமிறங்கினார். ஆனாலும், மறுமுனையில் நின்ற ரெய்லர் 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, மக்கலம் வந்தார். அத்துடன் 5 ஓட்டங்களுடன் ஸ்ரைஸ் ஆட்டமிழந்தார்.

அடுத்து புல்ரொன் வந்தார். இவர்கள் குறைந்த பந்துகளில் கூடுதலான ஓட்டங்களைப் பெற்றதனால் அணியின் ஓட்ட எண்ணிக்கை சடுதியாக அதிகரித்தது.

அணி 317 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் 9 பந்துகளில் 2 சிக்ஸர், 1 பவுண்டரி அடங்கலாக 21 ஓட்டங்களைப் பெற்றிருந்த மக்கலம் ஆட்டமிழந்தார். 50 ஓவர்கள் நிறைவில் நியூஸிலாந்து அணி 6 விக்கெட்டுக்களை இழந்து, 324 ஓட்டங்களைக் குவித்தது. இதில் புல்ரொன் 13, மார்ஷல் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தனர்.

பந்து வீச்சில் கைல் 3, பிராட்சோ, சிமித் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

325 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடினமான இலக்குடன் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி காத்திருந்தது. அணி 7 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் 5 ஓட்டங்களுடன் இருந்த கைல் ஆட்டமிழந்தார்.

அடுத்து மோட்டன் இணைந்து கொண்டார். எனினும், அணி 46 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் 15 ஓட்டங்களுடனிருந்த கங்கா ஆட்டமிழந்தார்.

இவரையடுத்து, ராம்டீன் களமிறங்கினார். எனினும், இவரும் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இதன்போது அணி 64 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அடுத்து சர்வான் களமிறங்கினார். இவரும் மோட்டனும் இணைந்து சிறப்பாக விளையாடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தனர்.

இதில் சர்வான் அதிரடியாக விளையாடினார். இவர்கள் இருவரும் அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரிப்பார்கள் என எதிர்பார்க்கப்பட்டவேளை - 40 பந்துகளில் ஒரு சிக்ஸர், 2 பவுண்டரிகள் அடங்கலாக 42 ஓட்டங்களைப் பெற்றிருந்த சர்வான் ரன் அவுட்டானார்.

இவரையடுத்து சந்தர்போல் களமிறங்கினார். இவரும் சிறப்பாக விளையாடியபோதிலும், அணி 212 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்துவந்த சிமித் 1, ஹின்ட்ஸ் 0, பிராவோ 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

50 ஓவர்கள் நிறைவில் மேற்கிந்தியத் தீவுகள் அணி - 8 விக்கெட்டுக்களை இழந்து 233 ஓட்டங்களை மட்டுமே பெற்றதனால், 91 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. இந்த அணி சார்பாகச் சிறப்பாக விளையாடிய மோட்டன் 110, பிராட்சோ 1 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தனர்.

பந்துவீச்சில் மில்ஸ் 3, பொண்ட், ஸ்ரைஸ், விற்றோரி, அஸ்ரில் நால்வரும் தலா ஒவ்வொரு விக்கெட்டை கைப்பற்றினர்.

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும்

வேட்பாளர்களுக்குரிய இலக்கங்கள் அரசியல்கட்சிகளுக்கு அனுப்பிவைப்பு

யாழ்ப்பாணம்

யாழ்.மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு போட்டியிடும் வேட்பாளர்களுக்கான இலக்கங்கள் - அந்தந்த அரசியல் கட்சிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக யாழ்.தேர்தல்கள் அலுவலக உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட உள்ளூராட்சித் தேர்தல் ஏற்பாடுகள் தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் -

யாழ். மாவட்டம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள 20 உள்ளூராட்சி சபைகளுக்கும் ஒவ்வொரு விதமான வாக்குச்சீட்டுக்கள் தேவைப்படுவதால் - 20 சபைகளுக்கும் 20 விதமான வாக்குச்சீட்டுக்கள் வழங்கப்படவேண்டுமென தேர்தல் தலைமையகத்திடம் கேட்டிருக்கிறோம்.

உள்ளூராட்சித் தேர்தலின் தபால்மூல வாக்களிப்புக்கான வாக்குச்சீட்டுக்கள் திணைக்களங்களுக்கு விநியோகிக்கும் பணி எதிர்வரும் 9 ஆம் திகதி ஆரம்பமாகுமெனத் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் அறிவிக்கப்பட்டபடி இடம்பெறுமா எனக் கேட்டபோது -

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் அலுவலகமாக யாழ்.தேர்தல் அலுவலகமே உள்ளது.

இந்த மாவட்டத்தில் தேர்தல் நடத்துவதற்குத் ஏதுவாக ஆளணி நியமனம் தொடக்கம் அனைத்துச் செயற்பாடுகளையும் யாழ். தேர்தல்கள் அலுவலகமே மேற்கொண்டு வருகிறது.

எனினும் கிளிநொச்சி மாவட்டத்தில் தேர்தல் நடத்துவதா? இல்லையா என்பது குறித்து தேர்தல்கள் திணைக்களமும் கட்சிகளுமே நடவடிக்கை எடுக்கவேண்டுமென அவர் தெரிவித்தார்.

இதேவேளை - யாழ்.செயலகத்தில் உள்ளூராட்சி தேர்தலுக்கான வாக்காளர் அட்டை தயாரிக்கும் பணி முழுமையாக இடம்பெற்றுவருவதையும் செயலகத்துக்கு வெளியே பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

நிறுத்தல் அளவைகளுக்கு முத்திரையிடும் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம்

யாழ். செயலகத்தில் கடந்த புதன்கிழமை தொடக்கம் நிறுத்தல் அளவைகளுக்கு முத்திரையிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அடுத்த மாதத்தில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் திருநெல்வேலியில் நிறுத்தல் அளவைகளுக்கு முத்திரையிடும் பணிகள் ஆரம்பிக்கப்படும்..

தற்போது செயலகத்தில் இடம்பெறும் முத்திரையிடும் சேவையில் வர்த்தகர்கள் தமது நிறுத்தல் அளவைகளுக்கு முத்திரையிடலாம் என யாழ்.செயலக அளவீட்டு அலகுகளும், நியமங்களும், சேவைகளும் பிரிவு அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த ஆண்டு யாழ். மாவட்டத்தில் அங்கீகரிக்கப்படாத நிறுத்தல் அளவைகளை பயன்படுத்திய 72 பேர் திடீர் பரிசோதனையின் போது கண்டுபிடிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இவர்கள், அங்கீகரிக்கப்படாத நிறுத்தல் அளவைகள், சீல் வைக்கப்படாத நிறுத்தல் அளவைகள் மற்றும் அளவைகளுக்கு பதிலாக சைக்கிள் அச்சு, போத்தல்கள், பொட்டலங்கள் போன்ற பொருட்களை நிறுவை - அளவைகளாகப் பயன்படுத்தியுள்ளதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

நீண்டகாலமாகத் திருத்தப்படாத கரம்பைக்குறிச்சி பாடசாலை வீதி

சுதுமலை

வரணி - கரம்பைக்குறிச்சி பாடசாலை வீதி கடந்த பல வருடங்களாகத் திருத்தப்படாமையால் கிராம மக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்குவதுடன் மாணவர்களும், ஆசிரியர்களும் நாளாந்தம் போக்குவரத்து இடர்பாடுகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஜே-342 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட 216 குடும்பங்களை உள்ளடக்கியதான கரம்பைக்குறிச்சி கிராமத்துக்கான உள் வீதிகள் உட்பட பாடசாலை வீதியும் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படவில்லையென கிராம மக்கள் தெரிவித்தனர்.

கரம்பைக் குறிச்சி அ.த.க பாடசாலை அதிபர் சின்னத்தம்பி கந்தசாமி இது தொடர்பாக கருத்து வெளியிடுகையில் -

வீதிகள் புனரமைக்கப்படாமையால் ஆசிரியர்கள், மாணவர்கள் நாளாந்தம் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். மழை காலங்களில் இந்த வீதிகளால் போக்குவரத்து செய்ய முடியாத நிலையே தொடர்ச்சியாக இருந்து வருகிறது.

இனிவரும் மழை காலங்களில் பாடசாலையை மூடவேண்டிய நிலை ஏற்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பல்வேறு வசதியீனங்கள் மத்தியில் இயங்கி வருகின்ற பாடசாலைக்கு மின்சார வசதிகூட இதுவரை ஏற்படுத்தப்படவில்லை. இது தொடர்பாக உரிய உயர் அதிகாரிகளுடன் தொடர்புகொண்டும் இதுவரை எவரும் எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வில்லையென அதிபர் தெரிவித்தார்.

(91)

சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு கற்கோவளத்தில் வீடுகள் கையளிப்பு

யாழ்ப்பாணம்

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு மக்களுக்கு சர்வதேச தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் அமைக்கப்பட்ட வீடுகளின் ஒரு தொகுதி கையளிக்கப்பட்டன.

கே.பி.என்.ஜி என்ற தொண்டு நிறுவனத்தால் கற்கோவளம் - புனிதநகரில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அமைக்கப்படும் வீடுகளில் முதல்கட்டமாக பூர்த்திசெய்யப்பட்ட வீடுகளின் ஒரு தொகுதி கையளிக்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்றது.

இந்த வீடுகள் கையளிக்கும் நிகழ்வில் யாழ்.அரச அதிபர் கே.கணேஸ், பருத்தித்துறைப் பிரதேச செயலர் வரதீஸ்வரன், கே.பி.என்.ஜி நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி இராஜன் ஆசீர்வாதம், நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் வரவேற்புரையை பருத்தித்துறைப் பிரதேச செயலர் வரதீஸ்வரன் நிகழ்த்தினார். தலைமை உரையை அரச அதிபர் கே.கணேஸ் நிகழ்த்தினார். வீடுகளை அரச அதிபர் கே.கணேஸ் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்து உரிமையாளர்களிடம் கையளித்தார்.

இதேவேளை, இத்தாலிய தன்னார்வத் தொண்டு நிறுவனமான மூவிமொண்டோ நிறுவனம் நாகதம்பிரான் நல்லன்புரி நிலையத்தில் வசிக்கும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள குடத்தனை வடக்கு கிராமசேவையாளர் பிரிவில் அமைத்த 46 நிரந்தர வீடுகள் கையளிக்கும் நிகழ்வும் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்விலும் யாழ். அரச அதிபர் கே. கணேஸ் கலந்து கொண்டார்.

யாழ். மாவட்ட அலுவலர்களுக்கு கருத்தரங்கில் அனுமதியில்லை!

யாழ்ப்பாணம்

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் நடத்தப்படவுள்ள பெண் உரிமை தொடர்பான கருத்தரங்கில் கலந்துகொள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலக உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான செயற்திட்ட அலுவலர்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் நாட்டிலுள்ள சகல ஆணைக்குழு அலுவலகங்களையும் சேர்ந்த உள்நாட்டு இடம்பெயர்ந்தவர்களுக்கான செயற்திட்டங்களை மேற்கொள்ளும் அலுவலர்களுக்கு - எதிர்வரும் 8 ஆம் திகதி அனுராதபுரத்தில் நடைபெறவுள்ள பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக இக்கருத்தரங்கில் ஆராயப்படவுள்ளது.

யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலக உள்நாட்டு இடம்பெயர்ந்தோருக்கான செயற்திட்டத்தை மேற்கொள்கின்ற அலுவலர்கள் அழைக்கப்படாததையிட்டு மனித உரிமைகள் ஆணைக்குழு வட்டாரங்கள் விசனம் தெரிவித்தன.

பெண்கள் தொடர்பான பல்வேறு விடயங்கள் ஆராயப்படவுள்ளதால் பல்வேறு விடயங்களைப் பெற்றுக் கொள்வதற்கு உதவி புரியக்கூடிய இந்தக் கருத்தரங்குக்கு உள்நாட்டு செயற்திட்டத்துக்கு பொறுப்பன அதிகாரிகூட அழைக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகரை நான்கு

பெயர் : க.வி.கனுசன்
முகவரி : மீசாலை வடக்கு

அகரை ஏழு

பெயர் : க.வி.லதுஷன்
முகவரி : மீசாலை வடக்கு.

தவக்கால நற்சிந்தனை

யேசுவின் நாமமே நமக்கு மீட்பளிக்கும் நாமம். அவரது போதனைகள் நமது வாழ்க்கையின் வழிகாட்டிகள். அவருடைய நற்செய்தியின் மதிப்பீடுகள்தான் உண்மைக்கும், தூய்மைக்கும், நீதிக்கும், கருணைக்கும் ஏற்ற மதிப்பீடுகள். இன்று உலகத்தில் காணும் ஒழுக்கக் கேடான அநீதிகளும், பொய்களும் நிறைந்த மதிப்படுகளுக்கு யேசுவின் மதிப்பீடுகளோ எதிரானவை. காரணம் அவர் உள்ளதை, உண்மையை நேரடியாகவே துணிந்து எடுத்துரைத்தார். எவருக்கும் அஞ்சவில்லை.

வாழ்வும் வழியும் உயிரும் உயிர்ப்பும் உண்மையும் நானே என்றார். என் வழியாய் அன்றி தந்தையிடம் யாரும் செல்லமுடியாது என்றும் கூறினார். தாம் தந்தையினுள்ளும், தந்தை தம்முள்ளும் இருப்பதாக எடுத்துரைத்தார். யேசு தனக்காக வாழாமல் நமக்காக வாழ்ந்தது போல கிறிஸ்தவர்கள் என்று பெருமையுடன் சொல்லிக்கொள்ளுகின்ற தம்பட்டம் அடிக்கிற நாமும் பிறருக்காகவே வாழவேண்டும் என்பதே தந்தையின் விருப்பம். யேசுவின் வழிகாட்டலுமாகும். எனவே அவரது நாமத்தைப் போற்றி அவரது வார்த்தைகளைச் சிந்தனையில் இருத்தி ஆன்மநோய் நீங்கியவர்களாக வாழமுயற்சிப்போம்.

மோ.தார்சீசியஸ்.

யாழ்ப்பாணத்தில் டெங்கு அபாயம் சுகாதாரப்பகுதி அசமந்தப்போக்கு

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தில் டெங்குக் காய்ச்சல் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ள நிலையில் - அதனைக் கட்டுப்படுத்த யாழ். மாவட்ட சுகாதாரப் பகுதியினர் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லையென பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு வகை நுளம்பால் பரவும் கொடிய நோயாகிய டெங்குக் காய்ச்சல் யாழ்ப்பாணத்தில் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் யாழ். மாவட்ட சுகாதாரப் பகுதியினர் விழிப்புணர்வு பிரசாரங்களையோ, விழிப்புணர்வு நடவடிக்கைகளையோ மக்கள் மத்தியில் நடைமுறைப்படுத்த வில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த சுழிபுரம் - பண்ணாகத்தைச் சேர்ந்த ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

பதிவுசெய்யுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்

கிராமிய கைத்தொழில் மற்றும் சுயதொழில் முன்னேற்ற அமைச்சு சுயதொழில் முயற்சியாளரை ஊக்குவிக்கும் நோக்கில் மாவட்ட ரீதியாக சுயதொழில் முயற்சியில் ஈடுபட உத்தேசித்துள்ள சுயதொழில், அவர்கள் எதிர்பார்க்கும் வசதிகள் மற்றும் அவர்களிடம் உள்ள திறமைகள் போன்ற தகவல்களைச் சேகரித்து அனுப்புமாறு கைத்தொழில் அபிவிருத்தி சபையிடம் கோரியுள்ளது.

இதற்கமைய யாழ்.மாவட்டத்தில் சுயதொழில் முயற்சியில் ஈடுபட விரும்புபவர்கள் - கைத்தொழில் அபிவிருத்திசபை, மாவட்டக் காரியாலயம், யாழ்ப்பாணத்துடன் (கச்சேரி முன்பாக) தொடர்புகொண்டு தங்களைப் பதிவுசெய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

சின்னஞ்சிறு செய்திகள்

நிர்வாக சபை தெரிவு

யாழ்ப்பாணம்

வண்ணை - கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கான புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு கடந்த 11 ஆம் திகதி நடைபெற்றது.

புதிய நிர்வாக சபையின் தலைவராக கலாநிதி க.குணராஜா, செயலாளராக இரா.செல்வவடிவேல், பொருளாளராக பி.சிறிபாலகிருஷ்ணன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டதுடன், 21 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம்

சங்கானை நிகரை ஞானவைரவர் ஆலயத்தின் அலங்கார உற்சவம் நாளை ஆரம்பமாகி 11 தினங்கள் நடைபெறும்.

தினமும் காலை 9 மணிக்கு சாமுண்டாதேவி சமேத வைரவப் பெருமானுக்கு விசேட அபிஷேகங்கள் இடம்பெறும். மாலை 6 மணிக்கு வசந்த மண்டபப் பூசைகளைத் தொடர்ந்து சாமுண்டாதேவி சமேத வைரவப் பெருமான் வீதியுலா வருவார். (47)

போக்குவரத்து சிரமம்

வடமராட்சி

புத்தூர் - 9 ஆம் கட்டை வீதி திருத்தவேன நீர்வேலி பிரதேசசபையால் கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் கற்கள் பறிக்கப்பட்டு இன்றுவரை செப்பனிடும் வேலை எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை.

இந்த வீதியூடாக வாகனங்கள் செல்வதில் சிரமம் ஏற்படுவதோடு, அடிக்கடி விபத்துகளும் ஏற்பட்டு வருவதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

(110)

ஜெயந்தி விழா

யாழ்ப்பாணம்

கொக்குவில் ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாச்சிரமத்தில் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் 171 ஆவது ஜெயந்தி விழாவை முன்னிட்டு தாவடி தெற்கு ஸ்ரீ காளி அம்பாள் சனசமூக நிலையத்தில் நாளை காலை 9 மணிக்கு இலவச கண்பரிசோதனை முகாம் நடைபெறவுள்ளது.

விழா நிகழ்வு எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சேவாச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நெற்செய்கையில் அறுவடைக்குப் பின்னான தொழில்நுட்பம்

நெற்செய்கையில் மிகவும் முக்கிய கவனமெடுக்க வேண்டிய காலம் அறுவடையும், அதற்குப் பின்னருமேயாகும்.

யாழ்.மாவட்டத்தில் எமது நெற்பயிர்கள் அறுவடைக்குத் தயாராகிவிட்டன என்பதைத் தீர்மானிப்பதில் இலைகளின் நிறத்தைக் கவனத்தில் கொள்ளாமல் கதிரில் உள்ள மணிகளில் 85 வீதமானவை பொன்நிறமாக வருவதை அவதானிக்க வேண்டும். இந்த நிலை வந்ததும் நாம் அறுவடைக்குத் தயாராக வேண்டும். இதுவே அறுவடைக்கு உகந்த பருவமாகும். இந்த நிலைக்கு முந்தி அறுவடை செய்தால், முதிராத மணிகள் அரைவாசி, நிரம்பிய மணிகள் ஆகியன உருவாவதால் விளைவு குறைவடையும். உகந்த பருவம் தப்பி பிந்திய அறுவடையால் மணிகள் உதிர்தல், உடைதல், பூச்சிபீடை சேதம் போன்றவற்றால் விரைவில் குறைவு ஏற்படுகிறது. இப்படியாகப் பருவத்தே அறுவடை செய்யாது விடுவதால், எமக்குக் கிடைத்த விளைவில் 2 வீதத்தை நாம் இழக்க வேண்டியுள்ளது. எனவே நாம் சரியான நேரத்தில் அறுவடை செய்ய வேண்டும்.

இப்படியாக உரிய பருவத்தைத் தெரிவு செய்து, அறுவடை செய்த பயிரை இரண்டு நாட்கள் வயலில் காயவிட வேண்டும். இதனால் இலைகள் காய்வதுடன், மணிகளின் ஈரப்பதனும் 18%-22% இற்கு இடைப்பட்ட நிலையில் காணப்படும். இந்த நிலைதான் சூடு அடிக்க உகந்த பருவமாகும். சூடு அடிக்க பலமுறைகள் இருப்பினும், இங்கு நான்கு சில்லு உழவு இயந்திரம் மட்டுமே சூடடித்தல் மேற்கொள்ளப்படுகிறது. இங்கும் ஒரு முக்கிய தொழில்நுட்பம் கடைப்பிடிக்கப்படல் வேண்டும். அதாவது உழவு இயந்திரத்தின் பின்சில்லில் காற்றை குறைக்க வேண்டும். இதனால் மணிகள் உடைதல், வெடித்தல் என்பன ஏற்படாமல் பாதுகாக்கப்படுகிறது. சூடடிப்பதற்குரிய இடத்தைத் தெரிவு செய்து, துப்புரவு செய்தபின் மட்டப்படுத்தி சாக்குப் படங்குகளை விரித்து அதில் சூடு அடிப்பதால், இழப்புகள் குறைக்கப்படுகின்றன.

சூடடித்தலின் நெல்லுடன் களை விதைகள், வேறு ப்யிர் விதைகள், முதிர்ச்சிடையாத விதைகள், சேத முற்ற விதைகள், பாரம் குறைந்த பிற பொருட்கள் எனப் பல காணப்படும். எனவே, நாம் இரு தடவை தூற்று துப்புரவு செய்யவேண்டும். இதை மேலும் நல்ல முறையில் துப்புரவாக்க சதுர அங்குலத்துக்கு 8×8, 10×10, 12×12 துளை கொண்ட சல்லடைகளைப் பாவித்து, களை, விதைகள், பிற பொருட்கள் அகற்றப்பட்டு, தூய நெல்லாகப்பெற முடியும். இப்படியாகத் துப்புரவு செய்த நெல்லை நன்கு காயவைத்து, சேமிக்க வேண்டும். காயவைக்கும்போது நெல் மணியின் ஈரப்பதன் 12% தொடக்கம் 13% வருமாறு அவதானிக்க வேண்டும்.

இதற்கு நாம் நெல் மணியை எடுத்து பற்களால் கடிக்கும்போது இரு துண்டாக உடையின், இந்த நிலைதான் 12%-13% வீத ஈரப்பதன் நிலையென உணரலாம். இப்போது காய்ந்த நெல்லை நிழலில் ஆற விட்டு, நன்கு துப்புரவு செய்யப்பட்ட பயிர்கள் அல்லது சாக்குகளில் இட்டு சேமிக்கலாம். இந்தச் சாக்குகளில் ஏற்கனவே எஞ்சியிருந்த விதைகள் முற்றாக அகற்றி துப்புரவாக இருத்தலை உறுதி செய்ய வேண்டும். பின் பொதி செய்த நெல்லைக் களஞ்சியப் படுத்தல் வேண்டும் களஞ்சியப்படுத்துலுக்குத் தெரிவு செய்யப்பட்ட இடம், சுற்றாடல் என்பன துப்புரவாகவும் நல்ல குளிர்ந்த காற்றோட்டமுள்ளதாகவும் இருத்தல் வேண்டும். நெல் மூடைகளை வெறும் நிலத்தில் அடுக்கக்கூடாது. மரச்சட்டங்களை அடியில் பரவுதல் அல்லது பண்டைய முறையில் கோர்காலியில் நெல் மூடைகளை அடுக்கி வைக்கலாம். இப்படி அடுக்கும்போது மூடைகள் சுவரில் முட்டாதவாறு அடுக்கப்படல் வேண்டும். களஞ்சிய அறை யன்னல்கள்- மழை காலத்தில் மூடியும், வெய்யில் காலத்தில் திறந்தும் காற்றோட்ட வசதிசெய்தல் சிறந்ததாகும்.

விதை நெல்லாக சேமிப்பதாயின் நன்கு உலர்ந்த விதைகளை பைகளில் அல்லது சாக்கில் இட்டு வர்க்கத்தை இலகுவில் அடையாளம் காணக்கூடியவாறு வர்க்கத்தின் பெயர் அறுவடைத் திகதி என்பன குறிக்கப்பட்ட சுட்டிகளை சாக்கினுள் ஒன்றை வைத்துக் கட்டியும், வெளியில் ஒன்றை ஒட்டி அல்லது கட்டி விடல்வேண்டும். இப்படிக் கட்டிப் பொதி செய்த கூடைகளை நன்கு உலர்ந்த குளிரான காற்றோட்டமுள்ள இடத்தில் சேமிப்பதன் மூலம் முளைக்கும் தன்மை குறைவடையாமல், நீண்டகாலம் சேமிக்க முடியும். இங்கு விதைகளை களஞ்சியத்தில் தாக்கும் பறவைகள், எலிகள், வண்டுகள் என்பவற்றிலிருந்து பாதுகாக்க பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். விதை நெல் சேமிக்கும் இடம் நிலத்துடன் தொடர்பில்லாது உயரமான இடத்தில் சேமித்தல் மிகமிக அவசியம். விதை நெல்லாக விற்பனை செய்வதன் மூலம் கூடிய வருமானம் பெற்றுக்கொள்ள முடியும். எனவே, பொருத்தமான வயலைத் தெரிவு செய்து, தரமான பதிவு செய்த விதை நெல்லை விதைத்து, இறுதியாக கலப்புக்களை அகற்றி, அறுவடை செய்து, சேமிப்பு வரையான முக்கிய நடவடிக்கைகளைப் பின்பற்றி, உயர்தர விதை நெல்லை உற்பத்தி செய்வதுடன், உயர் வருமானத்தையும் பெற்றுக்கொள்ள முடியும்.

இ.சௌந்தராஜன்,
பாடவிதான உத்தியோகத்தர்-நெல்
உதவி விவசாயப்பணிப்பாளர்
அலுவலகம், திருநெல்வேலி.

மரக்கறிப் பயிர்களின் முக்கியத்துவம்

எமது நாளாந்த உணவு உட்கொள்ளலில் மரக்கறி வகை முக்கியத்துவம் வகிக்கிறது. அண்மைக்

கால ஆராய்ச்சிகள் மூலம் இவற்றின் அவசியம் வலியுறுத்தப்பட்டு வருகிறது. மனித உடல் ஆரோக்கியத்துக்குத் தேவையான புரதம், கொழுப்பு, மாப்பொருள், கனியுப்புகள், விற்றமின்கள் அனைத்தும் மரக்கறிப் பயிர்களில் போதியளவு உண்டு. இதைவிட ஒவ்வொரு மனிதரும் கட்டாயமாக உள்ளெடுக்க வேண்டிய நார்ப்பொருள் மரக்கறி உணவில் மட்டுமே உள்ளது. பயிர்களின் உண்ணத்தக்க காய்கள், பழங்கள், இலைகள், தண்டுகள், பூக்கள், வேர்கள் போன்ற பல பாகங்கள் மனித உணவாகப் பாவிக்கப்படுகிறது.

சீரான உணவுச் சமநிலையைப் பேணுவதற்கு ஒவ்வொரு மனிதரும் நாளொன்றுக்கு சராசரியாக, 280 கிராம் மரக்கறி உணவை உட்கொள்ள வேண்டும். இதில் 85 கிராம் வேர் மரக்கறிகளையும், 110 கிராம் இலை வகையைச் சேர்ந்ததாகவும், மிகுதி 85 கிராம் ஏனைய வகையினதாகவும் இருத்தல் சிறப்பான போசனை மட்டத்தை உறுதி செய்யும். எனினும், அண்மைக்கால புள்ளிவிபரங்களின் படி இலங்கையின் தனி மனிதனின் சராசரி மரக்கறி நுகர்வு நாளொன்றுக்கு 155 கிராம் ஆகவுள்ளது.

இலங்கையில் வருடாவருடம் சுமார் 60,000 ஹெக்டயர் நிலப்பரப்பில் 440,000 தொன் மரக்கறி உற்பத்தி செய்யப்படுகிறது. அண்மைக்காலங்களில் உலகில் பல்வேறு நாடுகளில் செய்யப்பட்ட ஆராய்ச்சியின் முடிவுகள் நீண்ட ஆயுளுக்கும், நோயற்ற வாழ்க்கைக்கும் மரக்கறி வகை உணவுகளின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன. இந்த வகை உணவு பின்வரும் நன்மைகளை ஏற்படுத்துகிறது.

- இலகுவில் சமிபாடு.
- உணவுத் தொகுதியின் சீரான தொழிற்பாட்டுக்கு நார்ப்பொருள் மிக அவசியமானது.
- பலவகை விற்றமின், கனிப் பொருள் அடங்கியவை.
- தாவரக் கொழுப்பில் கேடு விளைவிக்கும் கொலஸ்ரோல் இல்லாத தன்மை.

- உடலின் பல்வேறு உறுப்புகளின் தொடர்ச்சியான பாதுகாப்பு.
- இளமையுடன் கூடிய நீண்ட கால நோயற்ற வாழ்வு.
- நீண்ட ஆயுள்.

மரக்கறிப் பயிர்களின் தொடர்ச்சியான பாதுகாப்பு

இலங்கையில் பல பகுதிகளிலும் பயிரிடப்படும் மரக்கறிப் பயிர்களை இரு பிரிவுகளில் அடக்கலாம்.

1. உள்நாட்டு மரக்கறிப் பயிர்கள்.
2. மேல்நாட்டு அல்லது மலை நாட்டு மரக்கறி வகைகள்.

உள்நாட்டு மரக்கறி வகையில் கத்தரி, தக்காளி, பாகல், புடோல், பயிற்றை, வெண்டி, பூசணி போன்ற பயிர்கள் இந்த வகையில் அடங்குகின்றன.

மேல்நாட்டு மரக்கறி வகையில் கோவா, கரட், பீற்றூட், போஞ்சி, முட்டைக்கோவா, லீக்ஸ், முள்ளங்கி போன்ற பயிர்கள் அடங்குகின்றன.

மேல்நாட்டு மரக்கறி வகைகள் இலங்கையில், பெரும்பாலும் மலை நாட்டிலும் மத்திய மலை நாட்டிலுமே கூடிய அளவில் பயிரிடப்படுகிறது. இந்த வகைப் பயிர்களைப் பொறுத்தளவில் அனேகமான மேல்நாட்டு மரக்கறிப் பயிர்கள் யாழ்ப்பாணத்தில் மிகக் கூடிய பரப்பளவில் உற்பத்தி செய்யப்படுகிறது.

ஒரு சில இந்த வகைப் பயிர்களின் தரமும், விளைவும் நுவரெலியா மாவட்டப் பயிர்களுடன் ஒப்பிடும்போது குறைவாக இருப்பினும், இந்த மாவட்டத்தில் இந்தப் பயிர்களின் உற்பத்தி இலங்கையின் பிற மாவட்டங்களுக்கு ஒரு எடுத்துக் காட்டாகவுள்ளது.

வாழைப்பழம் வாழ்வு தரும்...

வாழைப்பழம் ஆண்டு முழுவதும் கிடைக்கும் ஒரு பழமாகும். இது விலையில் மலிவானது. அதிக சத்துக்கொண்டது. எளிதில் ஜீரணிக்கும் ருசியில் நிகரற்றது.

அப்பிள் பழத்தை கத்திகொண்டு அறுத்துச் சாப்பிடவேண்டும். தோடம் பழத்தை தோலை அகற்றி சாப்பிடவேண்டும். எடுத்த எடுப்பில் தோலை அகற்றிவிட்டு வாயில் போட்டு மெள்ளத் தகுந்த ஒரே பழம் வாழைப்பழம்.

இந்தப் பழத்தில் உயிர்ச்சத்து ஏ.பி.சி.டி. ஆகியன உள்ளன. குறிப்பாக சருமத்தை மென்மைப்படுத்தி, மினுமினுக்கச் செய்யும் உயிர்சத்து ஏ இதில் ஏராளம் அடங்கியிருக்கிறது. இது தவிர மூளைக்கு ஊக்கமளிக்கும் சத்தும் வாழைப்பழத்தில் உண்டு.

ஆறுமாதக் குழந்தைகளுக்கும் அறுபது வயதுக்கு கிழவருக்கும் அன்னத்தைப் போல் ஆதரவளிக்கும் ஒரேபழம் வாழைப்பழம். எனினும் முழுச்சத்தையும் பயன்படுத்திக்கொள்ள இந்தப் பழத்தை நன்றாய் மென்றே உண்ணவேண்டும். வாழைப்பழத்தில் பல வகைகள் உண்டு. எனினும் சத்தூட்டுவதில் ஒன்றுக்கொன்று சளைத்தவை அன்று. கொழுப்புப் பொருள் வாழைப்பழத்தில் மிகவும் குறைவு. 2 சதவீதம் மாத்திரமே. கொழுப்புக்கு இரத்தத்தில் 'கொலொஸ்ரோலை' உண்டுபண்ணக்கூடிய சக்தி இருக்கிறது. எனவேதான் இரத்தக் கொதிப்புள்ளவர்கூட தாராளமாக வாழைப்பழத்தை சாப்பிட்டு வரலாம். ஆனால், வாழைப்பழத்தில் மாப்பொருள் 36 சதவீதம் இருப்பதால், நீரழிவு நோயாளிகள் இந்தப் பழத்தை உண்ணாதிருப்பதே நலம்.

சிறுநீர்ப்போக்கை அதிகப்படுத்தும் தன்மை இதற்கிருப்பதால், சரீர பாரத்தைக் குறைக்க விரும்புவோர் இதை அதிகமாக உட்கொள்ளுகின்றனர். வாழைப்பழத்திலிருந்து இரும்புச்சத்து சோகை நோய்க்கு ஔடதமாகக் கருதப்படுகிறது.

கர்ப்பிணிகள் தாராளமாக இந்தப் பழத்தை உட்கொள்ளலாம். குடும்பக் கட்டுப்பாட்டுக்காக மாத்திரைகளை விழுங்கிக்கொண்டுவரும் பெண்களும் கூட இந்தப் பழத்தைத் தள்ளிப் போட வேண்டிய அவசியம் இல்லையாம். மலச்சிக்கலுக்கு வாழைப்பழம் ஒரு மருந்து என்று சிலர் நினைக்கிறார்கள். இது தவறு. உண்மையைக் கூறுமிடத்து வாழைப்பழம் மலத்தைக் கட்டும். ஆனால், வாழைப்பழத்தையும் - கொய்யாப்பழத்தையும் சேர்த்துச் சாப்பிட்டு வந்தால் இது மலமிழக்கியாக வேலை செய்கிறது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். நன்றாகக் கனிந்த வாழைப்பழத்தைப் பூட்டிப் பெட்டிகளில் வைத்தால் மேலும் நான்கு நாட்களுக்குக் கெடாமல் இருக்கும். தோல் கறுத்துப்போய் விடலாம். ஆனால், பழத்துக்கு சேதமேற்படாது. நன்றாய் விளைந்த வாழைக்காய்களை புகைமூட்டம் இல்லாமலே பழுக்கவைக்கலாம். சற்று கூடான இடத்தில் வைக்கவேண்டும் அவ்வளவுதான்.

தி.மு.க.கூட்டணியின் கட்சிகளிடையே தொகுதிப் பங்கீட்டில் உடன்பாடில்லை

நாளைய மாநாட்டில் அறிவிப்பும் இல்லை




சென்னை

கூட்டணி கட்சிகளுக்கான தொகுதிகள் எண்ணிக்கை முடிவாகாமல் இழுபறி நீடிப்பதால், தி.மு.க.வின் திருச்சி மாநாட்டில் தொகுதிகள் குறித்த அறிவிப்பு இருக்காது என்று கூறப்படுகிறது.

தி.மு.க.கூட்டணியில் உள்ள கட்சிகளுடன் கட்சித் தலைவர் கருணாநிதி தொகுதிப் பங்கீடு குறித்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார். காங்கிரஸ் சார்பில் வீரப்ப மொய்லி தலைமையிலான குழு கடந்த 25 ஆம் திகதி முதற்கட்டப் பேச்சுவார்த்தை நடத்தியது. வை.கோவும், ம.தி.மு.கவுக்கான தொகுதிகள் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தினார். பா.ம.கவும் ஒருமுறை பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கடந்த திங்கட் கிழமை இரவு அண்ணா அறிவாலயத்தில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. நேற்று முன்தினம் காலை இந்திய கம்யூனிஸ்ட் சார்பில் தா.பாண்டியன் உள்ளிட்ட தலைவர்கள் கருணாநிதியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

பேச்சுவார்த்தை இன்னும் தொடரும் என்று கம்யூனிஸ்ட் கட்சிகள் அறிவித்துள்ளன. தி.மு.க.வின் திருச்சி மாநாட்டில் கூட்டணி கட்சிகளுக்கான தொகுதிகள் எண்ணிக்கை அறிவிக்கப்படும். தொகுதிகளின் விபரம் பின்னர் அறிவிக்கப்படும் என்று கருணாநிதி ஏற்கனவே அறிவித்திருந்தார்.

ஆனால், பேச்சுவார்த்தை இழுபறியாக இருப்பதால், தொகுதிகளின் எண்ணிக்கை அறிவிப்புத் தள்ளிப் போகும் என்று தி.மு.க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நேற்றுக்காலை கருணாநிதி திருச்சிக்குப் புறப்பட்டார். நாளைமுதல் 5 ஆம் திகதிவரை மாநாடு நடைபெறவுள்ளது.

முக்கிய கட்சி களான காங்கிரஸ், பா.ம.க, ம.தி.மு.க ஆகிய கட்சிகளுக்கு தொகுதிகளின் எண்ணிக்கை இன்னும் இறுதி செய்யப்படவில்லை. அதற்குப் பிறகு காங்கிரஸ் கம்யூனிஸ்ட் மற்றும் தி.மு.கவின் எண்ணிக்கை இறுதி செய்யப்படவேண்டும். ம.தி.மு.க, தங்களுக்கு ஒதுக்கப்பட வுள்ள தொகுதிகளின் எண்ணிக்கை குறித்து, மாவட்டச் செயலர்கள் மற்றும் முக்கிய நிர்வாகிகளிடம் கருத்துக் கேட்டுவருகிறது. தி.மு.க, பொருளாளர் ஆற்காடு வீராசாமி நேற்று முன்தினம் வை.கோவை நேரில் சந்தித்து தொகுதிகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

இருந்தாலும் தொகுதி களின் எண்ணிக்கை இன்னும் இறுதி செய்யப்படவில்லை. கம்யூனிஸ்ட் கட்சிகளும் இரட்டை இலக்கத்தில் தொகுதிகள் கேட்டுவருவதால், இழுபறி ஏற்பட்டுள்ளது. கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு ஒற்றை இலக்கத்தில் தொகுதிகள் தர தி.மு.க திட்டமிட்டுள்ளது.

கம்யூனிஸ்ட் கட்சிகள் ஏற்கனவே நடத்திய நிர்வாகிகள் கூட்டத்தில் இரட்டை இலக்கத்தில் தொகுதிகளைப் பெற வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டது. அதற்கு மாறாகத் தொகுதிகளை ஒதுக்க முன்வந்தால் மீண்டும் கூட்டத்தைக் கூட்டி, தொகுதிகளின் எண்ணிக்கையை நிர்வாகிகளிடம் தெரிவித்து, ஒப்புதல் பெற்ற பிறகே சம்மதிக்க வேண்டும் என்று முக்கிய நிர்வாகிகள் நிபந்தனை விதித்ததாகக் கூறப்படுகிறது.

இதுவரை விடுதலைச் சிறுத்தைகளை கூட்டணியில் சேர்க்க வேண்டும் என்று வாதாடி வந்த பா.ம.கவின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதால், விடுதலைச் சிறுத்தைகள் அ.தி.மு.கவுடன் கூட்டணிக்குச் சென்றுவிட்டது. இதனால், பா.ம.க, சார்பிலும் கூடுதல் தொகுதிகளை எதிர்பார்ப்பதாகக் கூறப்படுகிறது.

கூட்டணியில் இடம் பெற்றுள்ள அனைத்துக் கட்சிகளும் கூடுதல் தொகுதிகளை எதிர்பார்ப் பதால், எண்ணிக்கையை முடிவு செய்வதில் இழுபறி இருந்து வருகிறது.

எனவே, .திருச்சி மாநாட்டுக்குப் பின்னரே அடுத்த கட் டத் தொகுதிப் பங்கீடு குறித்து பேச்சு வார்த்தை தொடரும் என்று கூட்டணி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அ.தி.மு.கவுக்காக தமிழகம் முழுவதும் பிரசாரம் செய்வாராம் விஜயகுமார்

சென்னை

தமிழகம் முழுவதும் அ.தி.மு.கவுக்காக தேர்தல் பிரசாரம் செய்வேன் என நடிகர் விஜயகுமார் தெரிவித்தார்.

காஞ்சிபுரம் நகர அ.தி.மு.க. சார்பில் முதல்வர் ஜெயலலிதா பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் நடிகர் விஜயகுமார் கலந்து கொண்டு பேசியதாவது –

அ.தி.மு.கவுக்கு நான் புதியவன் அல்ல. எம்.ஜி.ஆர் காலத்தில் அ.தி.மு.கவில் இணைந்தேன். சிறிதுகாலம் ஒதுங்கியிருந்தேன். தமிழகத்தை ஆளும் தகுதி ஜெயலலிதாவுக்கு மட்டுமே உள்ளது. வேறு யாருக்கும் அந்த அருகதை கிடையாது என்பதை அறிந்து கொண்டதால், நான் இந்த கழகத்தில் என்னை இணைத்துக் கொண்டேன். இனித் தமிழகம் முழுவதும் கூட்டங்களில் பேசுவேன். முதல்வர் ஜெயலலிதாவின் பெருமைகளை ஊர் ஊராகச் சென்று மக்களுக்கு தெரிவிப்பேன்.

அண்ணாத்துரை கூறிய கடமை, கண்ணியம், கட்டுப்பாடு அ.தி.மு.கவில் மட்டும் உள்ளது. வேறு எந்த கட்சியிலும் இல்லை. எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டம் கொண்டு வந்தது போல், ஜெயலலிதா கோயில்களில் அன்னதானம் வழங்கும் திட்டத்தை கொண்டுவந்துள்ளார். தமிழகத்தில் அமைதி நிலவுகிறது. கருணாநிதி ஒரு விழாவில் தமிழக ஆட்சியில் அழுக்கு நிறைந்துள்ளது. அதனைக் கழுவ வேண்டும் எனக் கூறியுள்ளார். 2001 ஆம் ஆண்டு தேர்தலிலே மக்கள் அழுக்கைத் துடைத்தெறிந்துவிட்டனர்.

கொஞ்சமிருந்த அழுக்கும் சமீபத்தில் பெய்த மழை வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டுவிட்டது. தமிழகத்தில் அ.தி.மு.க, தி.மு.க, ம.தி.மு.க ஜாதிகட்சிகள் என ஒவ்வொன்றுக்கும் குறிப்பிட்ட சதவீதம் வாக்கு வங்கியுள்ளது. ஆனால், 50 சத வீத மக்கள் நடுநிலையாளர்கள். அவர்கள் தான் வெற்றியை தீர்மானிப்பவர்கள்.

அவர்கள் தமிழகத்தை ஆளும் தகுதி முதல்வர் ஜெயலலிதாவுக்குத் தானுள்ளது. என தீர்மானித்து விட்டனர். எனவே ஏழு கட்சி அல்ல 70 கட்சிகள் கூட்டணி அமைத்தாலும் வெற்றி பெறமுடியாது. உங்களுக்கு மக்கள் ஓய்வு கொடுத்துவிட்டனர்.

நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் துரதிஷ்டவசமாக உங்களுக்கு வாய்ப் பளித்தனர். முதலில் மத்திய அரசில் பங்குவகிக்க மாட்டோம் என கருணாநிதிகூறினார்.

பின் சோனியா அமைச்சர் பதவி கொடுக்க முன் வந்தபோது பணம் வரும் பதவிதான் வேண்டும் என பிடிவாதம் பிடித்து வாங்கினார். அதில் அவரது உள்நோக்கம் தெரிந்தது. நாடாளுமன்றம் வேறு. சட்டசபை வேறு. இவ்வாறு விஜயகுமார் தெரிவித்தார்.

தமிழால் இணைந்த நட்பு தேர்தலால் பிரிந்துவிட்டது



சென்னை

பா.ம.க.நிறுவுனர் ராமதாஸ்-விடுதலைச் சிறுத்தைகள் பொதுச் செயலாளர் திருமாவளவன் இடையே தமிழால் இணைந்த நட்பு இன்று தேர்தலால் பிரிந்துவிட்டது.

பா.ம.கவுடன் நட்பு நீடிக்கும் என்று திருமாவளவன் கூறினாலும், தேர்தலில் இரு கட்சிகளும் எதிர் அணியில் இருக்கும் நிலையில் நட்பு நீடிக்கும் என்பது வெறும் வார்த்தைகளோடு நின்றுவிடும் என்று தெரிகிறது.

வட தமிழகத்தில் கீரியும், பாம்புமாக இருந்த இவர்கள்- கைகோர்த்து வலம் வந்தது பிற கட்சிகளின் கண்களையும் உறுத்தவே செய்தது. இவர்கள் இருவரின் நட்பு வலுவடைந்து விட்டால், வட தமிழகத்தில் பெரும் சக்தியாகத் திகழ்வார்களே என்ற அச்சமும் பிற கட்சிகளுக்கு இருந்து வந்தது. தற்போது நட்பு முறிந்து விடும் நிலை ஏற்பட்டுள்ளதால் அப்படி எண்ணியவர்களுக்கு எல்லாம் பெரிய ஆறுதல்.

பல்வேறு கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், தமிழ் இவர்கள் இருவரையும் இணைத்தது. ஆனால், தேர்தல் சதுரங்கத்தில் நட்பு தோற்றுப் போய்விட்டது.

விடுதலைச் சிறுத்தைகளும், பாட்டாளி மக்கள் கட்சியினரும் 1992 இலிருந்து இணக்கமாகத்தான் இருந்து வந்தனர். ஆனால், அவ்வப் போது ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளால் 1998 இற்குப் பிறகு பெரிய விரிசல் ஏற்பட்டு, இருதரப்பிலும் விரோதத்தை வளர்த்துவிட்டது.

'முதல் எதிரி' என்று இருதரப்பினரும் ஒருவரையொருவர் பார்க்கும் அளவுக்குச் சூழ்நிலை மோசமானது. இதனால் வட மாவட்டங்களில் சமூக அமைதிக்குக்கூடப் பங்கம் ஏற்பட்டதுண்டு.

இந்த நிலையில் இரு தலைவர்களின் சிந்தனையில், கருத்தில் கலந்திருக்கும் தமிழ் உணர்வை பாலமாகக் கொண்டு, இருவரையும் மீண்டும் கைகோர்க்க வைத்தனர் தமிழ் அறிஞர்கள்.

இந்த நட்பால் இரு கட்சிகளுக்கும் நன்மை கிடைத்ததோடு, தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களின் சமூக ஒற்றுமைக்கு அடித்தளமாக அமைந்தது.

பல்வேறு தமிழ்ப் பாதுகாப்பு மாநாடுகளில் இருவரும் கூட்டாகக் கலந்து கொண்டனர். இதைத் தமிழ் அறிஞர்களும் கொண்டாடி மகிழ்ந்து வந்தனர்.

இந்த நிலையில் சட்டப் பேரவைத் தேர்தல் வந்தது. நாடாளுமன்றத் தேர்தல் போலவே தி.மு.க கூட்டணியில் ஐக்கியமானது. பா.ம.க. விடுதலைச் சிறுத்தைகளையும், தி.மு.க கூட்டணியில் சேர்த்துவிட வேண்டும் என்று பா.ம.க துடியாய் துடித்தது. ஆனால், இடம் இல்லை என்று கையை விரித்துவிட்டது தி.மு.க,. பா.ம.க.வின் இந்த துடிப்புக்குக் காரணம் நட்பு மட்டுமே அல்ல. வட தமிழகத்தில் தலித்துக்களின் வாக்கு வங்கியைக் கருத்தில் கொண்டும், விடுதலைச் சிறுத்தைகள் தி.மு.க கூட்டணியில் இடம் பெற வேண்டும் என்று விரும்பியது. ஆனால், பா.ம.க.முயற்சி தோல்வியில் முடிந்தது.

இடங்களின் எண்ணிக்கை ஒரு புறம் இருக்கட்டும். ஆனால், எங்களை தி.மு.க அங்கீகரிக்க மறுப்பது எங்களுக்குப் பெரிய வேதனையாக இருந்தது. விடுதலைச் சிறுத்தைகளும் கூட்டணியில் உள்ளனர். தொகுதிகள் பின்னர் ஒதுக்கப்படும் என்று தி.மு.க தலைவர் கருணாநிதி சொல்லியிருந்தால் 'நெட்டையோ குட்டையோ' நாங்கள் ஏற்றிருப் போம். ஆனால், தி.மு.க எங்களை அவமானப்படுத்திவிட்டது. அதனால் தான் கட்சியின் பெரும்பாலான நிர்வாகிகள் அ.தி.மு.கவுடன் கூட்டணி அமைக்க விரும்பினர். இந்த நிலையில் அ.தி.மு.கவிடம் இருந்து அழைப்பு வந்ததால் ஏற்றுக்கொண்டோம் என்றார் திருமாவளவன்.

முறையாக அழைப்பு வந்தால் கூட்டணி குறித்து பேசலாம்

கிருஷ்ணசாமி தெரிவிப்பு

சென்னை

தி.மு.க.கூட்டணியில் 7 கட்சிகளுக்குத் தொகுதிப் பங்கீடு குறித்து பேச்சுவார்த்தை நடந்துவருகிறது. இந்த நிலையில் தென் மாவட்டங்களில் கணிசமான வாக்குகளை வைத்துள்ள டொக்டர் கிருஷ்ணசாமியின் புதிய தமிழகம் கட்சி கூட்டணி குறித்து பரிசீலித்து வருகிறது.

இது குறித்து டொக்டர் கிருஷ்ணசாமி கூறியதாவது –

திருச்சியில் நடந்த பொதுக்குழுவின் தீர்மானத்தின் படி 160 தொகுதி களில் போட்டியிட முடிவு செய்யப்பட்டது. கூட்டணி அமைய வாய்ப்பு ஏற்படு மானால், அதை ஏற்றுக் கொள்வோம். அ.தி.மு.கவில் கூட்டணிக்காகக் கதவுகள் திறந்து இருக்கிறது என்று முதலமைச்சர் கூறினார்.

கதவு திறந்து இருந்தால் மட்டுமே போதாது. முறையான அழைப்பு வந்தால் கூட்டணி பற்றிப் பேசத் தயாராக இருக்கிறோம் எனத் தெரிவித்தார்.

கூட்டணி குறித்து பேசவருகின்ற கட்சிகளைத் தடுக்கமாட்டேன்

என்கிறார் விஜயகாந்

கிருஷ்ணகிரி

காங்கிரஸிலுள்ள மத்திய அமைச்சர் ஒருவர் நான் அரசியலுக்கு வந்தது துரதிஷ்டம் என்று கூறியுள்ளார். பாரம்பரியம் மிக்க குடும்பத்தில் இருந்து வந்த அவர், இப்போது தி.மு.க

தலைமையிடம் கைகட்டி நின்றுள்ளது தான் துரதிஷ்டம் என காவேரிப் பட்டணத்தில் விஜயகாந்தெரிவித்தார்.

காவவேரிப் பட்டணத்தில் பல்லாயிரக்கணக்கானோர் மத்தியில் விஜயகாந் பேசியதாவது –

மக்கள் கூட்டணி எங்கள் கட்சிக்குள்ளது. கூட்டணி குறித்து பேச வரும் கட்சி களை தடுக்கமாட்டேன்.

என் கட்சியில் இருக்கும் இளைஞர்கள் வேகமானவர்கள். அவர்கள் வேகத்துக்கு ஈடுகொடுத்து, வேலை செய்பவர்கள் என் கட்சிக்கு வரலாம். நான் கட்டுப்பாடு உள்ளவன். எதையுமே வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என்று பேசுபவன். மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்பதற்காக அரசியலுக்கு வந்துள்ளேன்.

தி.மு.க.வும், அ.தி.மு.கவும் மக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வருகின்றனர். நீங்களும் அவர்களுக்கே மாறி மாறி வாக்களித்துள்ளீர்கள். இதில் ஒரு கட்சி, ஏழு கட்சிக் கூட்டணி என்று கூறிவருகிறது. மற்றொரு கட்சி கூட்டணிக்கு வாசற்கதவு திறந்தே உள்ளது என்று கூறிவருகிறது.

இவர்களின் தனிப் பெரும் பான்மை என்ன ஆனது. நான் மக்களை தைரியமாக சந்தித்து, வாக்குக் கேட்டு வருகின்றேன். நான் தமிழகத்தில் 14 மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்துள்ளேன்.

நான் சென்றது போல் எந்தத் தலைவரும் சுற்றுப் பயணம் செய்திருக்க முடியாது. விமானத்தினும், ரயிலிலும், ஹெலிகொப்டரிலும் சுற்றுப் பயணம் செய்தால், வீதிகள் எப்படி இருக்கிறது என்பது அவர்களுக்கு எப்படித் தெரியும்.

பீகாரில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது போல், தமிழகத்திலும் ஆட்சி மாற்றம் ஏற்பட எங்களுக்கு வாக்களியுங்கள் இவ்வாறு விஜயகாந் தெரிவித்தார்.

கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு வீதிகளை புனரமைக்க மலேசியா அரசிடம் கோரிக்கை!

முல்லைத்தீவு

வவுனியா, கிளிநொச்சி, முல்லைத் தீவு இடையேயான 120 கிலோ மீற்றர் வீதியை மேம்படுத்த மலேசிய அரசாங்கத்திடம் -இலங்கை அரசாங்கம் உதவி கோரியுள்ளது.

மலேசியா சென்றுள்ள இலங்கையின் வர்த்தக அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் -

வவுனியா, கிளிநொச்சி, முல்லைத் தீவு ஆகிய பகுதிகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளன. யுத்த நிறுத்த ஒப்பந்தம் தொடர்பான ஜெனிவா பேச்சுக்களுக்குப் பின்னர் இந்த வீதியை சீரமைக்க அரசாங்கத்திடம் விடுதலைப் புலிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

கடந்த 30 ஆண்டுகாலமாக இந்தப் பகுதி குறிப்பாக வீதிகள் புனரமைக்கப்படவில்லை என்றும், புதிய வீதிகளை அமைக்க வேண்டும் என்றும் அவர் கோரியதாக ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

இதற்குப் பதிலளித்த மலேசிய அமைச்சர் டத்தோ சாமி வேலு, இரு தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச் சாத்திடப்பட்ட பின்னர் இந்த வீதிகள் புனரமைக்கப்படும் என்றும், இலங்கைக்குச் செல்லும் மலேசிய அதிகாரிகள் குழு இது தொடர்பிலான ஆலோசனைகளை மேற்கொள்ளும் என்றும் தெரித்தார்.

அதேபோல கொழும்பு - கண்டி வீதியை சீரமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இலங்கை மற்றும் மலேசிய அரச தரப்பினர் கைச் சாத்திட்டுள்ளனர்.

இது தொடர்பான ஒப்பந்தம் ஏற்கனவே 2003 ஆம் ஆண்டு கைச்சாத்தான நிலையில் அரசாங்கம் மாறியதால் மீண்டும் கைச்சாத்திட வேண்டியதாக உள்ளது என்று இருநாட்டு அமைச்சர்களும் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பின் போது மலேசியாவுக்கான இலங்கைத் தூதர் சி.டி. கேசி சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் மகிபால ஹெரத், இலங்கை நெடுஞ்சாலைத்துறை அமைச்சின் செயலாளர் எஸ். அமரசேகர ஆகியோர் உடனிருந்தனர்.

லெப். கேணல் மறவன் பயிற்சிப் பாசறையில் 11 ஆவது அணிக்கான பயிற்சிகள் ஆரம்பம்

தாளையடி

லெப்.கேணல் மறவன் பயிற்சிப் பாசறையில் கடற்படை துணைப் படையின் 11 ஆவது அணிக்கான பயிற்சியில் - தாளையடி கிராம மக்களுக்கான பயிற்சி 22ஆம் திகதி வடமராட்சி கிழக்கு அரசியல் துறைப்பொறுப் பாளர் இசையூரன் தலைமையில் நடைபெற்றது.

வடமராட்சி கிழக்கு பொதுவிளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - பொதுச்சுடரை கிராம சேவையாளர் ஜெயனாந்தமலை ஏற்றிவைத்தார்.

தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ கடற்படையின் வடமராட்சி அரசியல் துறைப்பொறுப்பாளர் அன்பழகன் ஏற்றிவைத்தார்.

லெப்.கேணல் மறவனின் திருவுருவப்படத்துக்கான ஈகச்சுடரினை பயிற்சி ஆசிரியர் உருத்திரன் ஏற்றி வைத்தார்.

மலர் மாலையை தமிழீழ கடற் படையின் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் தமிழரசன் அணிவித்தார்.

இந்த நிகழ்வில் கருத்துரையை இசையூரன் நிகழ்த்தினார். இந்தப் பயிற்சிப்பாசறையில் 100 பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

வவுனியா - சைவப்பிரகாச மகளிர் கல்லூரிக்கு வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் ஒதுக்கீட்டு நிதியிலிருந்து இன்னிசைக் கருவிகள் வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர், சுகந்தி கிஷோர் ஆகியோர் பாடசாலை ஆசிரியர்களால் அழைத்து வரப்படுவதைமுதலாவது படத்திலும், இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் பொதுச்சுடர் ஏற்றுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

-படம் கனகரவி

சுதேச மருத்துவ ஓலைச் சுவடிகளை கையளிப்பவர்களுக்கு நன்கொடை

தமிழீழ சுகாதார சேவைகள் பொறுப்பாளர் விக்கிரமன்

கிளிநொச்சி

தமிழீழ சுகாதார சேவைகளின் பிரிவால் தமிழீழப் பரப்பில் பணியாற்றும் பாரம்பரிய சுதேச மருத்துவர்களின் விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருவதாக தமிழீழ சுகாதார சேவைகள் பொறுப்பாளர் விக்கிரமன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

எமது தாயகப்பிரதேசத்தில் பாரம்பரிய சுதேச மருத்துவத்தை பரம்பரையாக அனுசரித்து தொழில் புரிந்து கொண்டு இதுவரை மருத்துவ சபையில் பதிவு செய்யாதவர்களிடமிருந்து விபரங்கள் சேகரிக்கப்படுகின்றன. இவர்களது பாரம்பரிய சுதேச மருத்துவத்தை மேம்படுத்தவும், அவர்களிடம் உள்ள ஓலைச் சுவடிகள் மற்றும் கையேற்றுப் பிரதிகளையும் பாதுகாத்து ஆவணப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஓலைச் சுவடிகளை (ஏடுகள்) அச்சேறுவதற்கு அவற்றை கையளிப்பவர்களுக்கு உரிய நன்கொடை வழங்கப்படும்.

தாயகப் பிரதேசத்தில் பதிவை மேற்கொள்ளாதுள்ள பாரம்பரிய சுதேச மருத்துவர்கள் மருத்துவத் தொழிலை மேற்கொள்வதற்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கான விபரங்களைப் பெறுவதற்கு சுவடிகள் மற்றும் கையேட்டுப் பிரதிகளைக் கையளிப்பதற்கு பொறுப்பாளர், தமிழீழ சுகாதார சேவைகள், சுதேச மருத்துவப் பிரிவு, நடுவப்பணியகம், முதன்மைச்சபை, கிளிநொச்சி என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்தார்.

ஆளணி பற்றாக்குறையுடன் இயங்கும் வவுனியா தேசிய கல்விபிபற் கல்லூரி!

பீடாதிபதி கே.பேணாட் தெரிவிப்பு

வவுனியா

பௌதீக மனிதவளப் பற்றாக்குறையுடன் வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரி இயங்கி வருகின்றது என கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கே.பேணாட் தெரிவித்தார்.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் புதிய ஆசிரிய மாணவர்களை இணைக்கும் வரவேற்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு தெரிவிக்கையில் -

இந்த ஆண்டு 260 புதிய ஆசிரிய மாணவர்களை உள்வாங்கியுள்ளோம். நாம் சிரமத்தின் மத்தியிலேயே பணியாற்றி வருகின்றோம். அதேபோல் மாணவர்களும் குறைகளை பொருட்படுத்தாது கற்றுக்கொள்வதில் அக்கறைகாட்ட வேண்டும். பெற்றோரும் மாணவர்களும் ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் மட்டுமே இருக்கும் வளத்தைவைத்து சிறப்பாக பணியாற்ற முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

கல்லூரியின் பீடாதிபதி கே.பேணாட் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்வில் மங்கள விளக்கை வவுனியா கந்தசாமி குருக்கள் ஏற்றி வைத்தார். இதில் அனைத்து மதகுருமார், கல்லூரியின் உப பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள் ஆகியோருடன் பிரதம விருந்தினராக வவுனியா பிரதேச செயலாளர் செல்வி சுகந்தி துரைச்சாமி கலந்து கொண்டார். (03)

உடையார் கட்டு - குரவில் கிராமத்தில் பொது நோக்கு மண்டபம் திறந்து வைப்பு



உடையார் கட்டு

உடையார்கட்டு -குரவில் கிராமத்தில் பொது நோக்கு மண்டபம் நேற்று முன்தினம் காலை 11.00 மணியளவில் திறந்துவைக்கப்பட்டது.

சமூகப் பொருளாதார அபிவிருத்திச் சங்கத் தலைவர் இராஜேந்திரம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில்- பொதுச்சுடரை கடற்கரும்புலி கப்டன் புலிமகளின் தாயார் ஏற்றி வைத்தார்.

தமிழீழத் தேசியக் கொடியை உடையார் கட்டு பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் புகழரசன் ஏற்றி வைத்தார். புனர்வாழ்வு கழகக் கொடியை வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக பணியாளர் மூர்த்தி ஏற்றி வைத்தார்.

பெயர்ப் பலகையை முல்லைத்தீவு மாவட்ட சமூகப் பொருளாதார அபிவிருத்தி வங்கி முகாமையாளர் க.தயாபரன் திரைநீக்கம் செய்துவைத்தார்.

முன்பள்ளிக்கான அறையை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் உதவி நிறைவேற்றுப் பணிபாளர் வ.நீகன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

சமூகப்பொருளாதார அபிவிருத்திச்சங்க அறையை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் திருகோணமலை மாவட்டப் பணிப்பாளர் சு. விஜயகுமார் திறந்து வைத்தார். நூலக அறையை பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் புகழரசன் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வின் தலைமையுரையைத் தொடர்ந்து கருத்துரைகளை உடையார்கட்டு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் விநாயகமூர்த்தி, தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் சமுதாய மீள்கட்டமைப்புத்திட்டப் பணிப்பாளர் சுடர் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் குரவில் கிராமத்தில் அமைக்கப்பட்ட வீடுகளில் - 24 வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

முதலாவது வீட்டை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரத்தினம் கையளித்தார். இரண்டாவது வீட்டை உடையார் கட்டு தெற்கு கிராம அலுவலர் ஜெயதாஸும், மூன்றாவது வீட்டை முல்லைத்தீவு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக ஆலோசகர் பாலசுப்பிரமணியமும் கையளித்தனர்.

இந்த நிகழ்வில் பயனாளிக்கு சமையல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் சமுதாய மீள்கட்டமைப்புத் திட்டத்தின் கீழ் இந்த வீடுகள் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இரத்ததான அமைப்பு ஆரம்பம்

கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் தொடர்ந்து நிலவிவருகின்ற இரத்தப் பற்றாக்குறையை போக்கும் வகையில் இரத்ததான அமைப்பொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பினூடாக சமூகத்தில் இரத்தானம் செய்ய விரும்புகிறவர்களை இணைத்து கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை இரத்த வங்கிக்கு இரத்தம் வழங்கவுள்ளது.

தற்போது கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் இருந்து பல நோயாளர்கள் இரத்தம் ஏற்றுவதற்கு யாழ்.போதனா மருத்துவமனைக்கே செல்லவேண்டியுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக இந்த அமைப்பின் ஏற்பாட்டாளர் வேளமாலிகிதன் தெரிவித்தார்.

இந்த அமைப்பின் ஆரம்பச் செயற்பாட்டு நிகழ்வில் சுமார் 15 பேர் இரத்தானம் செய்தனர். இந்த நிகழ்வு நேற்றுக் காலை கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் நடைபெற்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தச் செயற்பாட்டின் மூலம் எதிர்காலத்தில் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் இரத்தப் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

நமது ஈழநாடு

சிந்தனைக்கு

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம் - திருக்குறள்

நமது நோக்கு

ஆற்றுப்படுத்துவது யார்?

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதாகக் கூறிக்கொண்டு ஓடோடி வந்த ஏராளமான தொண்டர் நிறுவனங்களில், பல வந்த வேகத்திலேயே மறைந்து விட்டன.

இந்தத் தொண்டர் நிறுவனங்களின் வாக்குறுதிகளை நம்பி வேலைத்திட்டங்களில் இறங்கிய அதிகாரிகள் இப்போது பொதுமக்களுக்கு என்ன சொல்வதென்று தெரியாமல் விழித்துக்கொண்டிருக்கின்றனர்.

சில வாரங்களுக்கு முன்னர் அமைச்சர் பேரியல் அஷ்ரப் உதவுவதாகக் கூறிக்கொண்டு வந்த தொண்டர் நிறுவனங்கள் எல்லாம் எமக்கு முழங்கையைக் காட்டி விட்டு ஓடிவிட்டன என்று ஆத்திரம் கொப்புளிக்கக் கூறியிருந்தார்.

அதுபோலவே, முல்லைத்தீவு அரச அதிபர் இமெல்டா சுகுமாரின் கருத்தும் இதேவிதமாகத்தான் இருந்தது. மொத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் இயற்கையாலும், சிங்கள பௌத்த பேரினவாத சக்திகளாலும் மட்டுமன்றி, வெளிநாட்டு தொண்டர் நிறுவனங்களாலும் கூட ஏமாற்றப்பட்டு வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த உண்மை பலருக்குக் கசப்பாக இருக்கலாம். ஆனால், உண்மையைச் சொல்லித்தானே ஆகவேண்டும். போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உதவுவதற்காக ஏராளமான தொண்டர் நிறுவனங்கள் இலங்கைக்கு படையெடுத்தன.

இவற்றுள் சில தொடர்ந்தும் தமது சேவைகளை ஆற்றிக்கொண்டுதான் இருக்கின்றன. இதேவேளை, சுனாமி அனர்த்தம்தான் - இலங்கையை நோக்கி நூற்றுக்கணக்கான தொண்டர் நிறுவனங்களின் கவனத்தைத் திருப்பியது.

வெளிநாட்டு உதவிகள் தாராளமாக - அதுவும் கோடிக்கணக்கான டொலர் திரண்டபோது அவற்றைக் கொண்டு, இலங்கை போன்ற நாடுகளுக்குள் இந்தத் தொண்டர் நிறுவனங்கள் ஊடுருவின.

இவ்வாறு ஊடுருவிய நிறுவனங்களில் உண்மையான சேவைநோக்கம் கொண்டவை, புலனாய்வுத் தேவைகளை நிறைவேற்றுவதற்கான நோக்கம் கொண்டவை, ஏதோ பேருக்கு கொஞ்சத்தைக் கொடுத்துவிட்டு எஞ்சியதைச் சுருட்டிக் கொண்டு போகலாம் என்ற நோக்கம் கொண்டவை என மூன்று வகைப்படுத்தலாம்.

இதில் மூன்றாவது வகையிலேயே பெரும்பாலான நிறுவனங்கள் இருந்தன என்பதுதான் கசப்பான உண்மை. பல நிறுவனங்கள் பாதிக்கப்பட்ட மக்களை ஏமாற்றிவிட்டுத் தப்பிச்சென்றுவிட்டன என்பதற்காக இப்போதும் சேவையாற்றிக் கொண்டிருக்கும் நிறுவனங்களின் பணியை ஒருபோதும் குறைத்து மதிப்பிடக் கூடாது.

இத்தகைய தொண்டர் நிறுவனங்களின் தயவில் தான் பாதிக்கப்பட்ட மக்கள் ஓரளவுக்காவது தம்மை மீளமைத்துக்கொள்ள முடிந்ததென்பதை எவரும் மறுக்க முடியாது.

அதேநேரம், "நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியோடி புல்லுக்குமாங்கே பொசிந்த" கதையாக வெளிநாட்டு நிதியுதவிகள் பெருமளவில் பம்மாத்து தொண்டர் நிறுவனங்களின் கைகளுக்கே சென்று விட்டதாகத் தெரிகிறது.

இத்தனை லட்சம் ரூபாவில் வீடுகள் அமைத்துத் தருகிறோம் என்று வாக்குறுதி கொடுத்துவிட்டு, உள்ளூர் அதிகாரிகளைக் கொண்டு சகல விபரங்களையும் திரட்டி- ஓரிரண்டு வீடுகளைக் கட்டிக் கொடுத்துவிட்டு அவற்றுக் குத் திறப்பு விழாக்கள் நடத்தி- அதைப்படம் பிடித்துக் கொண்டு ஓடி ஒளிந்த நிறுவனங்கள்தான் ஏராளம்.

இப்போது பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கும் உதவிகள், வீட்டுவசதிகள் கிடைக்கும் என்று நம்பிக்கொண்டிருக்கும் நிலையில் அவர்களுக்கு அதிகாரிகளால் என்ன பதிலைத்தான் கூறமுடியும்?

அப்படி உண்மையைக் கூறினாலும்தான் பாதிக்கப்பட்ட மக்கள் நம்பிவிடுவார்களா? இந்தத் தொண்டர் நிறுவனங்களின் வாக்குறுதியை நம்பி முதற்கட்டமாக தமது சொந்தப் பணத்தைச் செலவிட்டு வேலைகளைத் தொடங்கியவர்களின் கதிதான் என்ன?

சுனாமி என்ற இயற்கை ஒருபுறம் வஞ்சித்துச் சென்றுவிட்டவர்களை, சுனாமி பொதுக்கட்டமைப்பு செயற்படவிடாமல் தடுத்து சிங்களப் பேரினவாதிகளும் வஞ்சித்தார்கள். இப்போது தொண்டர் நிறுவனங்களும் இவர்களை வஞ்சிக்கின்றன.

இப்படியேபோனால் அனர்த்தத்துக்கு முகம் கொடுத்த மக்களை ஆற்றுப்படுத்துவதற்கு யார்தான் இருக்கிறார்கள்?

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

நாடும் நடப்பும்

ஜே.வி.பி - ஹெல உறுமய தலைவர்களை ஜனாதிபதி மகிந்த சந்தித்து பேசத்திட்டம்!

கொழும்பு

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வழங்கும் ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய கட்சிகளின் தலைவர்களை தனித்தனியே சந்தித்துப் பேசவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்துக்கு முன்னர் இந்தச் சந்திப்புக்கள் நடைபெறவுள்ளதாக ஜனாதிபதி மாளிகைத் தகவல்கள் தெரிவித்தன.

ஜெனிவா பேச்சுக்களின் பெறுபேறுகள் குறித்து இரு தரப்பினருக்கும் விளக்கமளிக்கும் நோக்கிலேயே இந்தச் சந்திப்புக்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

ஜெனிவாவில் இணக்கம் காணப்பட்டமைக்கு அமைவாக துணை ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களை களைவதற்கு அரசாங்கம் முற்பட்டால் - தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்து ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என ஜே.வி.பி ஜனாதிபதியிடம் வலியுறுத்தும் என அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

ஜே.வி.பியின் இந்த நிலைப்பாடானது நிலைமையை மேலும் மோசமாக்கும் என்பதுடன், சமாதான முயற்சிகளை முற்றாக சீர்குலைக்கும் என்றும் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஜே.வி.பியின் கோரிக்கையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஏற்றுக் கொள்ளாவிட்டால் அவரது அரசாங்கம் பெரும் நெருக்கடி நிலைக்குள் தள்ளப்படும்.

இந்த நிலையில் ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளை சமாதானப்படுத்தும் நோக்கிலேயே இந்தப் பேச்சுவார்த்தைகள் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி வழங்கிய தீர்வு நடைமுறைப்படுத்தப்படவில்லை

கொழும்பு

இறைவரித்திணைக்கள அதிகாரிகளின் தொழில் பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வழங்கிய தீர்வு இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஊழியர் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

இதன் மூலம் தொழிற் சங்கங்களையும், உள்நாட்டு இறைவரி ஊழியர்களையும் அவர் ஏமாற்றியுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த உத்தரவைக் கருத்தில் கொள்ளாது, சாதாரண நடைமுறையைப் பின்பற்றி தொழிற்சங்க ஊழியர்களை பணிகளில் இணைத்துக் கொள்வதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாகவும், ஊழியர்கள் விசனம்தெரிவித்தனர். (01)

மக்களை பாதுகாக்கவே பொலிஸ் துன்புறுத்துவதற்காக அல்ல!

மூதூர் நீதிவான் கணேசராசா

திருகோணமலை

பொலிஸார் பொதுமக்களைப் பாதுகாப்பதற்கே தவிர, துன்புறுத்துவதற்கு அல்ல என மூதூர் நீதிவான் மாணிக்கராசா கணேசராசா தெரிவித்தார்.

குண்டு ஒன்றை வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் மூதூர் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த எம்.புஸ்பேஸ்வரம் என்ற இளைஞன் சம்பந்தமான விசாரணையின் பின்னர் அவரை நீதிவான் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை விடுதலை செய்தார்.

கட்டைபறிச்சான் சோதனைச் சாவடிக்கு அண்மையில் குண்டு வைத்திருந்ததாக கூறி இரண்டு வாரங்களுக்கு முன்னர் படையினரால் கைதுசெய்யப்பட்டு, பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட மூதூர் கிழக்கைச் சேர்ந்த எம்.புஸ்பேஸ்வரம் சம்பந்தமான விசாரணை நீதிமன்றுக்கு வந்தபோது - மூதூர் பொலிஸாரின் புலன்விசாரணையின் போது சந்தேகநபரிடம் இருந்து குண்டு கண்டெடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து நீதிவான் சந்தேக நபரை விடுதலை செய்தார்.

பொலிஸார் ஏற்கனவே இந்த மாதிரியான வழக்குகளில் சந்தேக நபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்தி விளக்கமறியலில் வைத்த பின் புலன்விசாரணை மேற்கொண்டு அவ்வாறான சம்பவங்கள் நடைபெறவில்லை என நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்ததையும் நீதிவான் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், பொலிஸாரின் இவ்வாறான நடவடிக்கை பொறுப்பற்றதும், விவேகமற்றதும் எனக் குறிப்பிட்டார். அத்துடன் புலன்விசாரணையின் அடிப்படையை புரிந்து கொள்ளாமல் செயற்படுவதையே இது காட்டுகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (04)

அவசர கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்

உடற்கல்வி, மீன்பிடியியல் டிப்ளோமா பட்டம் பெற்று நேர்முகப்பரீட்சைக்கு தோற்றியவர்கள் மற்றும் தோற்றாதவர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று முற்பகல் 11 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் உள்ள "கரியர் டொட் கொம்" நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளர் - டிப்ளோமாதாரிகள் பற்றிய தரவுகளை 6 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கோரியுள்ளார்.

எனவே, அனைத்து டிப்ளோமாதாரிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் சங்கத் தலைவர் பா.தர்மகுமாரன் கேட்டுள்ளார்.

சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாட கியூடெக் - கரித்தாஸ் நிறுவனம் ஏற்பாடு

சுதுமலை

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கரித்தாஸ்-கியூடெக் நிறுவனத்தால் நடத்தப்படும் அமைதி ஊர்வலமும், பல்வேறு சிறப்பு நிகழ்வுகளும் நாளை மறுதினம் பி.ப 1 மணிக்கு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

நிறுவன இணைப்பாளர் எம்.பத்மா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் யு.என்.எச்.சி.ஆர் நிறுவனப் பிரதிநிதி செறின், நிறுவன இயக்குனர் அருட்திரு கி.யோ. ஜெயக்குமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிறுவன மகளிர் குழுக்கள் கலந்து கொள்ளும் அமைதி ஊர்வலம் யாழ். கோட்டை முனியப்பர் கோவிலில் இருந்து ஆரம்பமாகி கே.கே எஸ். வீதி, ஆஸ்பத்திரி வீதி வழியாக வந்து வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையைச் சென்றடையும்.

இந்த வருடம் சிறப்பாக பணியாற்றிய 6 பெண்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். அத்துடன், இசை நிகழ்வுகள், சிறப்புரைகள் மற்றும் 'சமத்துவ, சமாதான, சமூக பிணைப்பின் தொடர்பாடல் பெண்களே' என்னும் கருப்பொருளில் இடம்பெற்ற பேச்சுப்போட்டியில் வெற்றி பெற்றவர்களது உரைகளும் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (91)

வெரித்தாஸ் பரிசளிப்பு நிகழ்வு

சுதுமலை

வெரித்தாஸ் வானொலியின் தமிழ்ப் பணி நடத்திய வினாடிவினாப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு - எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ். பிரதான வீதியில் உள்ள பாதுகாவலன் பணிமனையில் நடைபெற வுள்ளது.

இதேவேளை பாதுகாவலன் பத்திரிகை யாளர்களுக்கான மாதாந்த கலந்துரையாடலும் அன்றையதினம் நடைபெறவுள்ளதால் அனைத்து பத்திரிகையாளர்களையும் கலந்துகொள்ளுமாறு அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளைகேட்டுள்ளார். (91)

அரசாங்கத்தின் குத்துக் கரணங்களால் கேள்விக்குறியாகும் ஜெனிவா பேச்சுக்கள்

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையே ஜெனிவா நகரில் இடம் பெற்ற பேச்சுவார்த்தையில் யார் வெற்றி பெற்றார்கள் என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது.

அரச பிரதிநிதிகளாகச் சென்ற நிமால் சிறிபால டி சில்வா - பேச்சுவார்த்தை இருதரப்பினருக்குமே வெற்றி என்று கூறியபொழுதிலும், யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டமை சிங்கள அரசின் வெற்றி என்று கூறியுள்ளார்.

மற்றைய பிரதிநிதியான எச்.எல்.டி.சில்வா யுத்த நிறுத்த உடன்படிக்கையில் ஜனாதிபதி ஒப்பமிடாததால் அது சட்ட வலுவற்றது என்றும், அத்துடன் அந்த ஒப்பந்தம் இலங்கை அரசியல் யாப்புக்கு முரணானது என்ற தனது கருத்தில் மாற்றம் இல்லை என்றும் கூறியுள்ளார்.

இந்த இரு சில்வாக்களுடன் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயையும் அரச குழுவில் மகிந்தராஜபக்ஷ சேர்த்துக் கொண்டமைக்குக் காரணம் தான் என்ன?

இலங்கையில் வாழ்கின்ற சில் வாக்களும், சொய்சாக்களும் எந்த இனத்தின் வழி வந்தவர்கள் என் பதை நாடாளுமன்றத்தில் முன்னர் இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப் பினர் ஒருவர் சுட்டிக் காட்டியிருந்தார்.

பண்டாரநாயக்கவின் அரசிலும், சிறிமாவோ அரசிலும் அமைச்சராக விருந்த சி.பி.டி.சில்வா - சிறிமாவோ அரசில் அமைச்சராக இருந்த கொல்வின் ஆர்.டீ.சில்வா ஆகியோர் தமிழினத்துக்கெதிராக சிங்கள பௌத்த மேலாண்மையை நிலை நிறுத்தச் சட்டங்களையும், அரசியல் யாப்பையும் கொண்டு வந்த பொழுது சில் வாக்களாகிய நீங்கள் எப்பொழுது இலங்கைக்கு வந்தீர்கள், வரும் பொழுது தமிழர்களாக வந்து பெரும் பான்மைச் சிங்கள இனத்துடன் வாழ்ந்து சிங்களவர்களாக மாறிவிட் டீர்கள். தமிழ் மூதாதைர்களைக் கொண்ட சில்வாக்களாகிய நீங்கள் உங்களைச் சிங்களவர்களாக மாற்றியது மட்டுமல்லாது, எங்களையும் சிங்களவர்களாக மாற்ற முன் நின்று பாடுபடுகின்றீர்கள் என்று வரலாற்றுச் சான்றுடன் சுட்டிக் காட்டியிருந்தார்.

இதனை எவரும் மறுக்கவும் இல்லை.

இன்று மகிந்தவும் அதே பழைய தமிழ் குடிவந்த சிங்களவர்களான நிமால் சிறிபால டி சில்வா, எச். எல்.டி. சில்வா ஆகிய இருவருடன் இடையில் சிங்களத்துடன் சங்கமமான பெர்னாண்டோ புள்ளேயையும் ஜெனிவாவுக்குச் சென்று சிங்களத்துக்காகப் பேசும்படி அனுப்பியிருந்தமை வியப் புக்குரியதல்ல.

இவர்கள் ஜெனிவா சென்று சாதிக்க முடியாதவற்றைத் திரும்பிய பின்னர் சாதித்துவிட்டதாக ஊடகங்களை அழைத்துக் கூறியுள்ளார். இவர்களின்கூற்றுக்களுக்கும் அங்கு நடந்தவைகளுக்கும் இடையே எவ் வளவு முரண்பாடுகள் நிறைந்துள் ளன என்பது யாவரும் அறிந்ததே.

அரசுக் குழுவினர் போர் நிறுத்த உடன்படிக்கையை மாற்றியமைக் கும் மகிந்தரின் சிந்தனையுடனேயே ஜெனிவா நகருக்குச் சென்றிருந் தனர். ஆனால் தமிழீழத் தேசியத் தலைவரை எரிச் சொல்ஹெய்ம் சந் தித்த பொழுதே யுத்த நிறுத்த உடன் படிக்கையைச் செம்மையாக நடை முறைப்படுத்துவதற்காகவே முதலில் பேசப்படும் என்று தலைவர் கூறி யிருந்தார்.

எனவே எரிக் சொல்ஹெய்ம் தனது தொடக்க உரையினும் போர் நிறுத்த உடன்படிக்கையைச் செவ் வனே வலுவுள்ளதாக நடைமுறைப் படுத்துவதற்காகவே இந்தப் பேச்சு வார்த்தை எனத் தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் ஒன்றை இங்கு குறிப்பிட்டிருந்தார். அரச தரப்பினர் தாங்கள் ஆளும் தரப்பினர் என்ற உயர்வுத் தோறணையினும், விடு தலைப் புலிகளைப் போராளிக் குழு வாகவும் காட்டியே பேச்சுவார்த்தை மேசையைப் பாவிக்க முனைவர் என்பதை முளையிலேயே எரிக் சொல் ஹெய்ம் கிள்ளி எறிந்து விட்டார்.

'இங்கு ஒருவர் உயர்ந்து மற்றவர் தாழ்ந்ததாக இருக்கவில்லை. விடு தலைப்புலிகள் தரப்புப் பிரதிநிதி களும், அரச தரப்புப் பிரதிநிதிகளும் சம அந்தஸ்தோடு, சம பிரதிநிதிகளாக ஒருவருக்கொருவர் குறைந்தவர் களல்ல என்ற அடிப்படையில் தான் இந்தப் பேச்சுவார்த்தை இங்கு தொடங்குகிறது' என்று எரிக் சொல் ஹெய்ம் அறிமுக உரையில் குறிப்பிட் டிருந்தார்.

இது உண்மையில் இலங்கைப் பிரதிநிதிகளுக்கும், தமிழீழப் பிரதி நிதிகளுக்குமிடையிலான பேச்சு வார்த்தை என்பதை உறுதிப்படுத் தியிருந்தது. இந்த நிலையை ஏற்றுக் கொண்டே அரச தரப்பினர் பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டனர்.

முதல் நாள் உரையில் போர் நிறுத்த உடன்படிக்கையை இலங்கை குடியரசின் அரசியல் அமைப்புக்கும் பிரதேச ஒருமைப்பாட்டுக்கும் ஊறு விளைவிக்கும் என்று கூறிய நிமல் சிறிபால டி சில்வா, இந்த ஒப்பந்தத் துக்குப் பாரிய திருத்தங்களைக் கொண்டுவரவே விரும்பினார்.

ஆனால் விடுதலைப் புலிகளின் பேச்சுவார்த்தைக் குழுவின் தலைவர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் கடும் கண்டனத்துக்குப் பிறகு அரச குழு தனது நிலையை மாற்றிக் கொண்டது. போர் நிறுத்த ஒப்பந்தம் சரியல்ல என்று நினைத்தால், 14 நாட்கள் காலக்கெடு கொடுத்து ஒப் பந்தத்திலிருந்து விலகிகொள்ளலாம் என்று அரச தரப்பினருக்குக் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கூறியதும் அரச தரப்பினர் தமது நிலையை மாற்றிப் பேச்சுவார்த்தை தொடர வழிவகுத் தனர்.

இரண்டாம் நாள் பேச்சுவார்த்தை முடிந்த பின்பு இரு பகுதியினரும் கையெழுத்திட்ட கூட்டறிக்கையை எரிக் சொல்ஹெய்ம் வெளியிட்டார். அந்தக் கூட்டறிக்கையில் 'போர் நிறுத்த ஒப்பந்தத்தை உறுதியாகக் கடைப்பிடிக்கவும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் தீர்ப் புக்களை ஏற்றுக் கொள்வதாகவும் 'இருதரப்பினரும் இணக்கம்' தெரி வித்திருந்தனர்.

ஆனால் நாடு திரும்பிய நிமல் சிறிபால டி சில்வா கூட்டறிக்கையில் குறிப்பிட்டுள்ளவைகளின் மூலம் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளதாகவும், இது அர சுக்குக் கிடைத்த வெற்றி என்றும் கூறியுள்ளார். மகிந்தவின் சிந்த னைக்கு ஏற்பட்ட படுதோல்வியை மூடி மறைத்துச் சிங்கள மக்களைப் பேய்க்காட்ட எடுத்த முயற்சியே இது வாகும். பேச்சுவார்த்தைக்கு தலைமை ஏற்றுச் சென்றவர் இவ் வாறு குத்துக் கரணம் அடிப்பது அர சியல் நாகரிகமாகாது.

உடன்படிக்கை அல்லது ஒப்பந் தம் என்பது வேறு, கூட்டறிக்கை என் பது வேறு என்று சில்வாக்களுக்குத் தெரியாமல் இல்லை. அப்படித் தெரி யாமலிருந்தால் அவர்களுக்காகப் பரிதாப்படுவதைத் தவிரவேறெது வும் செய்ய முடியாது. உடன்படிக்கை யைச் செவ்வனே நடைமுறைப்படுத் துவதை ஒப்புக்கொண்டு நடத்திய பேச்சுவார்த்தை பற்றிய குறிப்பே கூட்டறிக்கையாகும்.

அந்தக் கூட்டறிக்கையில் எந்த இடத்தில் ஒப்பந்த விதிகளுக்குத் திருத்தம் செய்யப்பட்டுள்ளது அல்லது திருத்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்ற சொல் அங்கு பயன்படுத்தப் படவே இல்லை. அது மட்டுமல்ல விதி 1:8 எவ்வாறு செயற்படுத்துவது என்பதே அங்கு பேசப்பட்டு முடிவு செய்யப்பட்டதாகும்.

இதை விட அடுத்து கூட்டறிக்கை யில் குறிப்பிட்டுள்ள இன்னொரு விட யம் இராணுவத் தரப்பினர், பொலி ஸார் மீது தாக்குதல் நடத்தப்படமாட் டாது என்பதாகும். இதிலே வேடிக்கை என்னவென்றால், யுத்தநிறுத்தம் செய்ததே விடுதலைப் புலிகள் தான். யுத்த நிறுத்தம் என்பதே இராணு வத்தினர் மீதான தாக்குதல் நிறுத்தம் என்று தான் பொருள்படும்.

போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட



முன்னரே விடுதலைப் புலிகள் இவ் வாறான தாக்குதல்களை நிறுத்து வதாக அறிவித்திருந்தனர். இவ்வா றிருக்கையில் கூட்டறிக்கையில் இதைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளதை போர் நிறுத்த உடன்படிக்கையில் செய்யப்பட்ட திருத்தம் என்று ஏன் சொல்கிறார்களோ தெரியவில்லை.

இத்துடன் அங்கு பேசப்பட்ட இன்னொன்று சிறுவர்களைப் படை யில் சேர்த்தல் பற்றியதாகும். சிறு வர்கள் படையில் சேர்க்கப்படுகின் றார்களா? அல்லது பராமரிக்கப் படுகின்றார்களா? சிறுவர்களுக்கு ஏன் இந்த ஏதிலிகள் நிலை என்று விடுதலைப்புலிகள சுட்டிக்காட்டியி ருந்தனர். சிறுவர்களைப் படையில் சேர்ப்பதில்லை என்று புலிகள் விளக்கமளித்தனர். இதனையடுத்து சிறார் படைச் சேர்ப்பை நிறுத்தி சிறார் நலனில் அக்கறை செலுத்துவதை இருதரப்பினரும் கூட்டறிக்கையில் ஏற்றுக்கொண்டனர். இது கூடபோர் நிறுத்த ஒப்பந்தத்தில் செய்யப்பட்ட திருத்தம் அல்ல.

அப்படியெனின் இது போர் நிறுத்த ஒப்பந்தத்தில் எத்தனையாவது விதி யாகச் சேர்க்கப்பட்டுள்ளது என்று கூறப்பட்டிருக்கவேண்டும். ஆகவே, கூட்டறிக்கை இரு பகுதியினரும் சுமுகமான சூழ்நிலைக்கு வந்துள்ள னர் என்பதைக் காட்டுவதற்காக வெளியிடப்பட்ட ஆவணம் மாத்தி ரமே. இதை வைத்துக் கொண்டு போர் நிறுத்த உடன்படிக்கையில் திருத்தம் செய்து விட்டோம் என்று கூறிச் சிங்கள மக்களை ஏமாற்று வதற்கு எடுத்த முயற்சியாகவே கருதப்படவேண்டும்.

ஜே.வி.பியும், ஜாதிக ஹெல உறு மயவும் அரசின் பேச்சுவார்த்தை மேசை தோல்வியடைந்ததையிட் டுக் கோபம் கொண்டுள்ளன. தங்க ளுடன் எட்டப்பட்ட உடன்படிக் கையை மகிந்தவின் அரசு மீறி விட்டது, யுத்த நிறுத்த உடன்படிக் கையை மீளாய்வு செய்து, புதிய ஒப்பந்தத்தை ஏற்படுத்துவது என்ற ஒப்பந்தம் கைவிடப்பட்டுள்ளது என இந்த இரு கட்சிகளும் சிங்கள மக்க ளுக்குக் கூறுகின்றன.

மறுபுறம் ரணில் தான் செய்து கொண்ட போர் நிறுத்த உடன் படிக்கை சட்டரீதியானது, அதை மகிந்த ஏற்றுக் கொண்டு விட்டார் என்று கூறுகின்றார். இது மகிந்தவுக் கப் பெரிய இடஞ்சலை ஏற்படுத்தி விட்டது. சிங்கள மக்களுக்கு உண் மையைத் தெரிவிக்கும்படி ரணில் குரல் கொடுக்கின்றார்.

எனவே தான் எல்லாவற்றையும் சமாளிப்பதற்காக,சிங்கள மக்களைத் திருப்திப்படுத்த வேண்டிய நிலையில் சில்வாக்கள் - போர் நிறுத்த உடன் படிக்கையில் திருத்தம் செய்யப்பட் டுக் கூட்டறிக்கையில் தெரிவித்துள்ள தாகக் கூறியுள்ளனர். இதிலே இன் னும் ஒன்றையும் இங்கு குறிப்பிட் டேயாகவேண்டும்.

உடன்படிக்கையில் 'போர் நிறுத் தம்' என்று குறிப்பிட்டால் போதும் யுத்த நிறுத்த உடன்படிக்கை எனக் குறிப்பிடக் கூடாது, உடன்படிக்கை என்பது எமக்கு ஏற்புடையதல்ல, இடைஞ்சலான சொல் என்று விடாப் பிடியாக அரச தரப்பினர் நின்றமை யையும் கவனிக்க வேண்டும். 'உடன்படிக்கை' என்ற சொல் உள் ளடக்கப்படாவிட்டால், விடப்பட்ட கூட்டறிக்கை யுத்த நிறுத்த ஒப்பந்தம் பற்றியதல்ல என்று நழுவிவிடலாம் என்று நினைத்தவர்களுக்கு, அது சாத்தியப்படவில்லை. எனவே குத்துக் கரணம் அடித்து மக்களுக்குத் தவ றான தகவல்களையும் கொடுக்கின் றார்கள்.

இதன் மூலம் சர்வதேசமீ, இந்தப் பேச்சுவார்த்தையின் போக்கைக் கவனித்து வந்தவர்கள், தங்களின் குத்துக்கரணத்தைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்று அவர்கள் அக் கறைப்பட்டதாகத் தெரியவில்லை.

போர் நிறுத்த ஒப்பந்தம் வலு வற்றது என்று கூறிச் சென்றவர்கள் அடித்த முதற் குத்துக் கரணம் அதைச் சட்ட ரீதியானதாக ஏற்றுப் பேச்சு வார்த்தை மேசையில் பேசியதாகும்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை வலு வானதாகச் செயற்படுத்துவதாகக் கூட்டறிக்கையில் கையெழுத்திட்டு பின்னர் அதில் திருத்தம் செய்து விட்டதாக அடித்த குத்துக் கரணம் இரண்டாவதாகும்.

மூன்றாவது குத்துக்கரணம் இலங்கைக்குத் திரும்பிய பின்னர் போர் நிறுத்த ஒப்பந்தம் சட்டவலுவற்றது, அரசியல் யாப்புக்கு முரணானது தான் என்ற நிலையில் மாற்ற மில்லை என்று கூறுவது. இவ்வாறு குத்துக்கரணமடிப்பர்கள் அடுத்து என்ன குத்துக்கரணமடிப்பார்களோ, ஆயுதக் குழுக்களைக் கட்டுப்படுத்தா மல் விடுவதற்கு ஏதாவது சாட்டுக் களைத் தேடுவார்களோ தெரிய வில்லை.

எனவே அடுத்த கட்டம் பேச்சு வார்த்தைக்கு முன்னர் அரச தரப்பினர் அடிக்கும் குத்துக்கரணங்களைப் பொறுத்தே பேச்சுவார்த்தையின் நகர்வு இருக்கும் என்று நம்பலாம்.

சிலம்பு

ஆலயத் திருவிழாக்களில் தவிர்க்கப்படுமா சினிமாப் பாடல்கள் ?

தேன்கைலை எனப் போற்றப்படும் நாயன்மார்களால் பாடல் பாடப்பட்டது மான கோணேசர் பூமியில் - தொன்மை வாய்ந்த இந்து மதம் இன்றுவரை நிலைத்திருக்கிறது. இந்த நிலை மேலும் தொடர வேண்டும் என்பதே அனை வரதும் விருப்பாகும்.

அன்று நாயன்மார்களின் இசையால் வளர்க்கப்பட்ட இந்து மத ஆலயங் களில் நடைபெறுகின்ற பூசைகள், திருவிழாக்களின் போது இசைக் கருவி களால் இசைக்கப்படுகின்ற பாடல்கள் இறைபக்தியை வளர்த்தனவாக இருந் தன. ஆனால் இன்று

வாசகர்நோக்கு

இசைக் கருவிகளில் இசைக்கப்படுகின்ற பாடல்கள் ஆண், பெண் இச்சை களைத் தூண்டுகின்ற வண்ணம் சினிமாவில் வருகின்ற துள்ளிசை, மெல்லிசை சினிமா பாடல்களான 'அழகே பிரம்மனிடம் மனுக்கொடுக்கப் போயிருந்தேன், வெண்ணிலவே வெண்ணிலவே வானத்த விட்டிட்டுவா, மன்மதராசா மன்மதராசா' போன்ற பாடல்கள் இசைக்கப்படுகின்றன.

இது எம் மதத்தை இழிவுபடுத்துகின்ற செயலாகவும் மற்றைய மதத்தவர் கிண்டல் செய்கின்ற நடவடிக்கையாகவும் உள்ளது.

எனவே ஆலய வழிபாட்டின் போதும், சுவாமி வீதி உலா வரும் போதும் இசைக்கப்படுகின்ற இத்தகைய கீழ்த்தரமான சினிமாப் பாடல்களை ஆலய நிர்வாகத்தினரும், நாதஸ்வர வித்துவான்களும், மற்றும் இசைக் கலைஞர் களும் உடனடியாக எவ்வித மறுப்புகளும் இன்றி நடவடிக்கை எடுக்க வேண் டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

இந்தத் தகவல்கள் அடங்கிய அறிக்கையானது - 26 ஆம் திகதி பங்குனி மாதம் 2005 ஆம் ஆண்டு எம்மால் முதற்தடவையாக அறிவிக்கப்பட்டிருந்த போதும், இந்த நிலை இன்று வரை மாற்றமடையாதமைக்கு காரணம் இந்தத் தகவல் உரியவர்களுக்கு உரிய முறையில் சென்றடையாமையா? அல்லது அவர்கள் வேண்டுமென்றே எமது மதத்தை இழிவுபடுத்துவதற்காக இவ்வாறு செயற்படுகின்றார்களா? எனத் தெரியவில்லை.

எது எவ்வாறு இருப்பினும் உரியவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில், அவர்கள் ஒவ்வொருவருக்கும் எம்மால், எமது பாணியில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அனைவருக்கும் அறியத்தருகின் றோம்.

நவயுக மைந்தர்கள் அமைப்பு

(ஆலய வழிபாட்டின்போது சினிமாப் பாடல்கள் இசைக்கப்படலாமா என விளித்து திருகோணமலையில் பரவலாக துண்டுப் பிரசுரங்கள் விநியோ கிக்கப்பட்டுள்ளன.

'நவயுக மைந்தர் அமைப்பு' எனக் குறிப்பிடப்பட்டு அந்த பிரசுரம் திருக் கோணேசர் ஆலய ஊர்வலத்தின்போது விநியோகிக்கப்பட்டது. குடாநாட்டுக் கும் இது பொருந்தும் என அன்பர் ஒருவர் இதை அனுப்பியுள்ளார்.)

பாகிஸ்தான் இராணுவம் தாக்குதல்; 25 தீவிரவாத சந்தேகநபர்கள் பலி!

இஸ்லாமாபாத்

பாகிஸ்தானின் வடபகுதி வகிறிஸ்தான் மாகாணத்தில் இராணுவத்தினர் மேற்கொண்ட பாரிய தாக்குதலில் 25 தலிபான் தீவிரவாத சந்தேக நபர்கள் கொல்லப்பட்டதாக பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தப் பகுதியிலிருந்து தீவிரவாதிகளின் முகாமெனச் சந்தேகிக்கப்படும் இடத்தில் பாகிஸ்தானின் மூன்று ஹெலிகொப்டர்கள் தாக்கு தலை மேற்கொண்டன.

தாக்குதல் நடத்தப்பட்ட இடம் தீவிரவாதிகளின் பயிற்சி முகாமென வகிறிஸ்தான் மாகாண அதிகாரி சயீட் சகீல் இஸ்லாம் தெரிவித்தார்.

இந்தப் பகுதியிலுள்ள மலைப்பகுதியில் தீவிரவாதிகள் கூடாரங்களை அமைத்திருந்தனர் எனவும் அவர் தெரிவித்தார்.

புனாய்வுத் தகவல்கள் மூலம் கிடைத்த உறுதியான தகவலையடுத்தே இந்தப்பகுதியில் பாரிய தாக்குதலை நடத்தியதாக பாகிஸ்தான் இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் சௌகத் சுல்தான் தெரிவித்தார்.

பாகிஸ்தானுக்கு அமெரிக்க ஜனாதிபதி புஷ் விஜயம் மேற்கொள்ளவுள்ள நிலையில், பாகிஸ்தான் இராணுவம் இந்தப் பாரிய தாக்குதலை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பறவைக் காய்ச்சலை அடுத்து
புஷ்ஷுக்கு அளிக்கப்படும் விருந்தில் கோழி இறைச்சி பயன்படுத்தத் தடை!

புதுடெல்லி

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் 3நாட்கள் சுற்றுப்பயணமாக நேற்று இந்தியா வந்தார் அவருடன் அவரது மனைவி லாரா மற்றும் குடும்பத்தினரும் வந்தனர்.

விமானநிலையத்தில்ஜோர்ஜ் புஷ்ஷை பிரதமர் மன்மோகன் சிங் வரவேற்றார். இன்று காலை ஜனாதிபதி மாளிகையில் ஜோர்ஜ்புஷ்ஷுக்கு இராஎணுவ மரியாதைவளிக்கப்படுகிறது. இதில் ஜனாதிபதி, பிரதமர் கலந்து கொள்வார்கள். பின்னர் ஹைதராபாத்பவனில் ஜோர்ஜ்புஷ்ஷும், மன்மோகன் சிங்கும் சந்தித்துப் பேசுவர்.

இன்று இரவு 7.30மணிக்கு ஜனாதிபதி மாளிகையில் புஷ்ஷுக்கு விருந்தளிக்கப்படும். தற்போது இந்தியாவில் பறவைக்காய்ச்சல் நோய் பீதி ஏற்பட்டுள்ளதால் இந்த விருந்தில் கோழி இறைச்சி இருக்காது என்று ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்தது.

வெவ்வேறு விதமான மீன்களும், இறால்களும் இந்த விருந்தில் இருக்கும். மேலும், ஜோர்ஜ் புஷ்ஷுக்கு பிடித்த புரோகோலி சூப்பும் இந்த விருந்தில் இடம்பெறும்.

நாளை ஜோர்ஜ்புஷ் ஹைதராபாத் செல்வார். அன்று மாலையே அவர் டெல்கி திரும்புவார். இரவு அவர் இந்திய சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு பாகிஸ்தான் செல்வார்.

அந்தமான், நிகோபார் தீவின் நிலத்தட்டு சுனாமிக்குப் பின் சாய்வு!

போர்ட்பிளேர்

கடந்த 2004 ஆம் ஆண்டு டிசம்பர் 26ஆம் திகதி சுனாமி பேரழிவு ஏற்பட்டது. இந்தோனேசியாவிலுள்ள சுமத்ரா தீவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் இந்தோனேசியா, தாய்லாந்து, இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் சுனாமி ஏற்பட்டது.

இந்த சுனாமியால் அந்தமான், நிகோபார் தீவுகள் மிகப்பெரிய பாதிப்புக்குள்ளானது. தொடர்ந்து அங்கு நிலநடுக்கம் ஏற்பட்டு வருகிறது.

சுனாமிக்குப் பிறகு அந்தமான், நிகோபாரில் நிலத்தட்டு சாய்ந்த நிலையில் உள்ளதாக இந்தியக் கடல் வளர்ச்சித்துறைச் செயலாளர் பி. எஸ். கோல் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது –

சுனாமி ஏற்பட்டதைத் தொடர்ந்து அந்தமான், நிகோபார் தீவு குறித்து ஆய்வு மேற் கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வில் அங்குள்ள இந்திரா பொயின்ட் என்ற பகுதி நீரில் மூழ்கியும், அந்தமான் நிகோபார் தீவின் வடக்குப் பகுதி முன்பு இருந்ததைவிட ஒரு மீற்றர் உயர்ந்தும் உள்ளது. இதைத் தவிர பெரிய அளவில் பாதிப்பு இல்லை எனத் தெரிவித்தார்.

சாதனைக்கு பயிற்சி எடுத்த நடிகர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்!

திருவனந்தபுரம்

திருவனந்தபுரத்தில் ஆர்ட்டிஸ்ஹில் பகுதியைச்சேர்ந்தவர் அஜீ (வயது45)என்பவர் சினிமா மற்றும்தொலைக்காட்சித் தொடர்களில் நடித்து வந்தார். தமிழில் விஜயகாந்தின் கஜேந்திரா படத்தில் நடித்தார்.

அஜீ மின்சாரம் மூலம் சாதனை நிகழ்ச்சி செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். தண்ணீரில் மின்சாரத்தை பாய்ச்சி அதற்குள் இறங்குவது, வயரை உடலில் சுற்றிக்கொண்டு மின்சாரம் பாய்ச்சுவது என பல சாதனைகள் செய்து வந்தார்.

இந்த நிலையில் தனியார் தொலைக்காட்சி ஒன்று இவரது சாதனையை நேற்று நேரடி ஒளிபரப்பு செய்வதாக அறிவித்தது. இதற்காக அஜீ நேற்று மாலை மின்சாரத்தை உடலில் பாய்ச்சி பயிற்சி எடுத்தார்.

அப்போது எதிர்பாராத விதமாக அஜீயை மின்சாரம் தாக்கியது. இதில் தூக்கி வீசப்பட்ட அஜீ ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லும் வழியில் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

ஈராக்கில் தொடரும் வன்முறைகள் நேற்று முன்தினமும் 68 பேர் பலி!

பாக்தாத்

ஈராக்கில் ஷியா-சுனி என்ற இரு பிரிவு முஸ்லிம்கள் வாழ்கின்றனர். இவர்கள் இடையே காலம் காலமாகவே மேதல் போக்கு நிலவுகிறது. சதாம் சுனி பிரிவைச் சேர்ந்தவர் அவர் ஆட்சிக் காலத்தில் ஷியா முஸ்லிம்களை அடக்கி வந்தார். அவர் வீழ்ந்ததும் ஷியா முஸ்லிம்களின் கை ஓங்கியது. அதிலிருந்து இரு தரப்பினருக்கும் அடிக்கடி மோதல் ஏற்பட்டுவருகிறது.

இதற்கிடையே சமரா என்ற இடத்தில் கடந்த 22 ஆம் திகதி ஷியா முஸ்லிம்களின் தர்ஹா ஒன்று குண்டு வைத்து தகர்க்கப்பட்டது. இதனால் இரு தரப்புக்குமிடையே மீண்டும் மோதல் வெடித்தது. இதனால் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டு, கடந்த திங்கட்கிழமை விலக்கிக் கொள்ளப்பட்டது.

மீண்டும் கலவரம் வெடித்தது. நாடு முழுவதும் பல இடங்களில் மோதிக்கொண்டனர். கொறையா என்ற இடத்தில் ஷியா முஸ்லிம்கள் கூடி நின்றஇடத்தில் கார்குண்டு மூலம் தாக்கு தல் நடத்தப்பட்டது. இதில் 23 பேர் கொல்லப்பட்டனர். 55 பேர் படுகாயமடைந்தனர்.

அதேபோல பாக்தாத்தில் மண்ணெண் ணெய் வாங்குவதற்காக வரிசையில் நின்ற மக்கள் மீது தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதில் 23 பேர் கொல்லப்பட்டனர். தெற்குப் பாக்தாத் நகரில் 9 சுனி முஸ்லிம்கள் எரித்துக் கொல்லப்பட்டுக் கிடந்தனர். காசிமியா என்ற இடத்தில் ஷியா முஸ்லிம்கள் தர்ஹா ஒன்றை வெடிகுண்டு வீசித் தகர்த்தனர். இதில் ஒருவர் கொல்லப்பட்டார்.

சதாமின் சொந்த ஊரான திக்ரித்தில் சுனி முஸ்லிம் மசூதி தகர்க்கப்பட்டது. சதாம் ஹுசேனின் தந்தை கல்லறையையும் தகர்த்தனர். மான்கர் மாவட்டத்தில் காரில் வந்த மர்ம மனிதர்கள் சன்னி மசூதியை நோக்கிச் சுட்டனர் இதில் 3 பேர் உயிரிழந்தனர். பாக்தாத்தில் ஷியா முஸ்லிம் குரு ஒருவர் கை, கண்கள் கட்டப்பட்ட நிலையில் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டுக் கிடந்தார். அதே பகுதியில்குண்டு வெடிப்பில் 6 பேர் கொல்லப்பட்டனர்.

நேற்று முன்தினம் மட்டும் கலவரத்தில் 68 பேர் பலியாகியிருக்கிறார்கள். வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

சுனி – ஷியா முஸ்லிம்கள் மோதலால் இது வரை 379பேர் கொல்லப்பட்டிருப்பதாக ஈராக் அரசு தரப்பில் கூறப்படுகிறது.

ஆனால் அமெரிக்காவிலிருந்து வெளிவரும் வொஷிங்டன் போஸ்ட் பத்திரிகை இதுவரை 1300 இற்கும் மேற்பட்டோர் பலியாகியிருப்பதாகக் கூறியிருக்கிறது. ஈராக் போர் தொடங்கியதற்குப் பிறகு அமெரிக்க இராணுவ வீரர்கள் 2292 பேர் பலியாகியிருப்பதாக இராணுவத் தரப்புத் தகவல் தெரிவித்தது.

பிரான்ஸில் பறவைக் காய்ச்சல் வான்கோழிப் பண்ணை அழிப்பு!

பாரிஸ்

தென்கிழக்கு பிரான்ஸில் பறவைக்காய்ச்சலால் ஒரு வான்கோழி பண்ணை முற்றிலும் நாசமாகியுள்ளது. 15 காட்டுஅன்னாங்கள் மற்றும் 2காட்டு வாத்துக்களும் பறவைக்காய்ச்சலுக்கு பலியாகியுள்ளன. இந்தத் தகவலை பிரான்ஸ் வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பண்ணையிலுள்ள 11ஆயிரம் வான்கோழிகள் பறவைக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டதை அதிகாரிகள் உறுதிப்படுத்தினர்.

இதில் 400பறவைகள் தாமாகவே இறந்தன, மீதமுள்ளவை கொல்லப்பட்டன. ஐரோப்பிய ஒன்றியத்தில் வர்த்தக அடிப்படையிலான கோழிப்பண்ணைக்கு பறவைக்காய்ச்சல் பரவியுள்ளது இதுவே முதல் முறை. இதைத் தொடர்ந்து பண்ணை தொழில்துறை கடுமையாக பாதிக்கப்படும் என்ற அச்சம் எழுந்துள்ளது.

பறவைப்பண்ணைகள் அதிகமுள்ள நாடு பிரான்ஸ். பறவைக்காய்ச்சல் பரவியுள்ளதைத் தொடர்ந்து பண்ணை உரிமையாளர்களுக்கு அதிக சேதம் ஏற்படாமல் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் ஏடுக்கப்பட்டு வருகின்றன.

பறவைக்காய்ச்சல் பரவியுள்ளதை நினைத்து பிதியடையாமல் கோழிக்கறி உண்ணும்படி பிரான்ஸ் அதிபர் ஜக் சிராக் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

இதற்கிடையில், ஹொங்ஹொங்கைத் தொடர்ந்து ஜப்பானும் இறக்கும செய்யப்படும் கோழி இறைச்சி மற்றும் முட்டைகளுக்கு தடை விதித்துள்ளது.

தீவிரவாதிகளை ஒழிப்பதற்கு முஷாரப் அதிகம் செயற்படவேண்டும்

ஜனாதிபதி புஷ் தெரிவிப்பு



வொஷிங்டன்

இந்தியா – பாகிஸ்தானில் நேற்று முதல் 4 நாட்கள் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் அமெரிக்க ஜனாதிபதி புஷ், அமெரிக்காவிலிருந்து புறப்படுவதற்கு முன்பு நிருபர்களுக்குப் பேட்டியளித்தார். அவர் அங்கு கூறியதாவது –

பின்லேடனின் அல்கொய்டா இயக்கம் அமெரிக்காவுக்கும், பாகிஸ்தானுக்கும் பொது எதிரி. எனவே, நாங்கள் இருவரும் சேர்ந்து அல்கொய்டாவை எதிர்ப்போம். அல்கொய்டா முஷாரப்பின் உயிருக்கு அச்சுறுத்தலாகவும் இருக்கிறது.

நான்கு தடவை அவரைக் கொல்ல முயற்சித்திருக்கிறார்கள். எனவே, அவருக்குள்ள அபாயத்தை அவர் நன்கு உணர்ந்திருப்பார்.

எனவே, தீவரவாதிகளை ஒழிப்பதில் முஷாரப் இன்னும் அக்கறை காட்ட வேண்டும். இது தொடர்பாக எனது நண்பர் முஷாரப்புடன் விரிவாகப் பேச இருக்கிறேன். தீவிரவாதிகளை எதிர்த்து அமெரிக்கா தொடுத்துள்ள போர் தொடர்பான விடயங்களில் முஷாரப்புக்கு சில அரசியல் நெருக்கடிகள் இருப்பதை நான் உணர்கிறேன். ஆனாலும், எதற்கும் முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பதை உணர்ந்து அவர் செயற்படுவார் எனத் தெரிவித்தார்.

தலிபான்களின் ஊடுருவலை தடுப்பதற்கு வேலி அமைப்பு

ஜனாதிபதி முஷாரப் தெரிவிப்பு

வொஷிங்டன்

ஆப்கானிஸ்தானிலிருந்து பாகிஸ்தானுக்குள் தலிபான் தீவிரவாதிகள் ஊடுருவுவதைத் தடுக்க இரு நாடு களுக்குமிடையே வேலி அமைப்போம் என்று பாகிஸ் தான் ஜனாதிபதி முஷாரப் அறிவித்துள்ளார்.

அல்கொய்டா தீவிரவாதிகளை வேட்டையாடுவதிலும், பின்லேடனை பிடிப்பதிலும், தலிபான்களை வேட்டையாடுவதிலும் பாகிஸ்தான் போதுமான அளவுக்குவேகம் காட்டவில்லை என்ற விமர்சனம் அமெரிக்காவில் எழுந்துள்ளது. இதற்குப் பதிலளிக்கும் வகையில் முஷார இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் கூறியிருப்பதாவது –

நான் அல்கொய்டா மற்றும் தலிபான் தீவிரவாதிகளை வேட்டையாடுவதில் வேகம் காட்டவில்லை என்று கூறுவது தவறு. அது தவறான எண்ணத்தின் அடிப்படையில் எழுந்த கருத்தாகும். பின்லேடனைப் பிடிப்பதில் மட்டும் எங்கள் இராணுவம் ஈடுபடவில்லை. அல்கொய்டா, தலிபான் தீவிரவாதிகளைப் பிடிப்பதிலும் இராணுவத்தை நாங்கள் பயன்படுத்தி வருகிறோம்.

தீவிரவாதிகளுக்கு பயிற்சியளிக்கும் முகாம்களை மூடுவதற்காக 80 ஆயிரம் இராணுவ வீரர்கள் செயற்பட்டு வருகிறார்கள். இந்தப் பணியில் நாங்கள் 400 வீரர்களை இழந்துள்ளோம்.

தலிபான் தீவிரவாதிகள் பாகிஸ்தானுக்குள் ஊடுருவதைத் தடுப்பதற்காக பாகிஸ்தான் எல்லையில் வேலி அமைக்கப்படும். இதை ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி கர்சாய் மற்றும் அமெரிக்க ஜனாதிபதி புஷ் ஆகியோரிடம் வலியுறுத்தி வருகிறேன்.

தலிபான் தலைவர் முல்லா ஒமர் பாகிஸ்தானில் இல்லை. அவர் ஆப்கானிஸ்தானில் தான் இருக்கிறார். அவர் அங்கு இருப்பது 100 சதவீதம் நிச்சயம் எனத் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சர் எ.எச். எம். அஷ்வர், ஜனாதிபதியின் நாடாளுமன்ற விவகார ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக் கடிதத்தை எ.எச்.எம்.அஷ்வரிடம் அலரி மாளிகையில் வைத்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வழங்கினார்.

அடுத்த சர்வகட்சி மாநாடு 6ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

கொழும்பு

ஜெனிவாவில் நடைபெற்ற பேச்சுகளின் முன்னேற்றம் குறித்து அரசியல் கட்சிகளுக்கு விளக்கமளிக்கவும், தொடர்ந்து பேச்சுக்களை நடத்துவதற்கும் எதிர்வரும் 6 ஆம் திகதி சர்வகட்சி மாநாட்டைக் கூட்டுவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் எதிர்வரும் 6 ஆம் திகதி மாலை 5 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் சர்வகட்சி மாநாடு நடைபெறவுள்ளது.

கடந்த வாரம் ஜெனிவாவில் அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் சம்பந்தமாகவும், எதிர் நோக்கியிருக்கும் சவால்கள் தொடர்பாகவும், தெற்கிலிருக்கும் அரசியல் கட்சிகளுக்கு விளக்கமளித்து அவை தொடர்பாக அந்தக் கட்சிகளின் கருத்துக்களை அறிந்துகொள்வதற்காக இந்த மாநாட்டைக் கூட்டுவற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

இந்தச் சர்வகட்சி மாநாட்டுக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தவிர்ந்த நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், வெகுஜன அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் மதத் தலைவர்களுக்கு அழைப்பு விடுப்பதற்கான நடவடிக்கைகளில் ஜனாதிபதி செயலகம் ஈடுபட்டுள்ளது.

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஜெனிவாவில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாவதற்கு முன்னதாக இரு சர்வகட்சி மாநாடுகள் நடைபெற்றன. இதில் ஒரு மாநாட்டில் பேச்சுவார்த்தை நடத்தப்படுவதற்கான இடம்பற்றிய தீர்மானம் எடுக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டது.

பேச்சுவார்த்தைக்கான இடம் தீர்மானிக்கப்பட்ட பின்னர் இரண்டாவது சர்வகட்சி மாநாடு பேச்சுவார்த்தைக்கு சில தினங்களுக்கு முன்னதாக பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி நடைபெற்றது. 3 ஆவது மாநாடு எதிர்வரும் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது. அதேவேளை, இந்த மாநாடு நாளை நடைபெறவிருந்தமை குறிப்பிடத் தக்கது.

கொழும்பு மாநகர சபைத் தேர்தல்:

தடையை நீக்குமாறு கோரி தேர்தல் ஆணையாளர் மனு!

கொழும்பு

கொழும்பு மாநகர சபைக்கான தேர்தலை ஒத்திவைக்குமாறு வழங்கப்பட்ட நீதிமன்ற உத்தரவை நீக்குமாறுகோரி தேர்தல் ஆணையாளர், கொழும்பு தெரிவத்தாட்சி அதிகாரி ஆகியோர் மனுத்தாக்கல் செய்துள்ளனர்.

இதில் பிரதி வாதிகளாக ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் என். வி.கே.கே வேரகொட உட்பட 20பேர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயலரின் மனுவை விசாரித்த மேன் முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய உத்தரவானது- தேர்தல் சட்டங்களுக்கு முரணானது என மனுதாரர்கள் தெரிவித்தனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் சட்டங்களுக்கு அமைவாக வேட்பு மனு நிராகரிக்கப்பட்டமை குறித்து கருத்துத் தெரிவிக்க தெரிவத்தாட்சி அதிகாரி கடமைப்பட்டவர்அல்ல என வும் அதற்கான சட்டரீதியான தேவையும் இல்லை என மனுதாரர்கள் கூறியுள்ளனர்.

வேட்புமனு தேர்தல் சட்டங்களுக்கு அமைவாக தயாரிக்கப்படவில்லை எனில் இதனை நிராகரிக்கும் அதிகாரம் தெரிவத்தாட்சி அதிகாரிக்கு உள்ளது என மனுதாரர் சுட்டிக் காட்டினர். (01)

ஜெனிவா....

மூன்று சமூகங்களின் கருத்துக்கள் உள்வாங்கப்பட்ட நிலையில் அவை குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

யுத்தம் மூலம் தீர்வை ஏற்படுத்த முடியாது என்பதை உணர்ந்த நிலையானது, இரண்டு தரப்பினரையும் பேச்சுவார்த்தை மேசையில் அமரச் செய்தது.

ஜெனிவாப் பேச்சுவார்த்தையானது நிரந்தர சமாதானத்துக்கான அடித்தளமாகும். இந்த முதற்கட்ட பேச்சுவார்த்தையின் முன்னேற்றம் குறித்து நாம் கவனம் செலுத்தி வருகிறோம். இலங்கையில் வாழும் சகல சமூகங்கள் எதிர்பார்க்கும் சமாதானத்துக்கான அனுசரணையாளர்களாக நோர்வே செயலாற்றி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (01)

ஆசிரியர்கள் பயணித்த...

இதன்போது அங்கு நின்ற கடற்படையினர் அனைவரையும் இறங்குமாறு உத்தரவிட்டனர்.

எனினும், ஆசிரியைகள் தாம் வழமையாக இறங்குவதில்லை என்றும், இன்று மட்டும் ஏன் இறங்கச் சொல்கிறீர்கள் எனக் கேட்டபோது-

படையினர் பஸ்ஸை வீதிக்கருகில் சுமார் அரைமணி நேரம் நிறுத்தி வைத்ததுடன் மட்டுமல்லாது தமது அதிகாரி வரும்வரை தொடர்ந்து செல்ல அனுமதிக்க முடியாது எனவும் கூறினர்.

சுமார் அரை மணிநேரம் தாமதித்து அங்கு வந்த கடற்படை அதிகாரி - பஸ்ஸினுள் இருந்த ஆசிரியைகளை இறங்குமாறும், தாம் பஸ்ஸை சோதனையிடவேண்டும் என்றும் கூறினார்.

இதனையடுத்து ஆசிரியைகள்- இந்த வீதியால் பயணிக்கும் ஆசிரியர்களை பஸ்ஸிலிருந்தவாறே சோதனையிடப்படும் என்று இன்றைய பத்திரிகைகளில் செய்தி வெளிவந்திருப்பதாக படையினரிடம் கூறினர்.

இதேவேளை கடற்படை அதிகாரி இந்த அறிவித்தல் தமக்கு கிடைக்கவில்லை என்று கூறியதுடன் - அனைத்து ஆசிரியைகளையும் இறக்கி சோதனையிட்ட பின்னரே தொடர்ந்து பயணம் மேற்கொள்ள அனுமதித்தார்.

இலங்கை அரசின்...

பாதிக்கும்.

நேற்றைய டெய்லி மிரர் பத்திரிகைக்கு கருத்து வெளியிட்டுள்ள அரசதரப்பு பேச்சுக்குழுவின் பிரதிநிதிகளில் ஒருவரான சிரேஷ்ட சட்டத்தரணி எச்.எல்.டி.சில்வா - போர் நிறுத்த உடன்பாட்டில் திருத்தம் செய்யப்பட்டிருப்பதாகக் கூறியிருக்கிறார். இவரது இந்த வாதங்கள் நகைப்பிடக்கிடமானதும் ஆதாரமற்றதுமான கருத்துக்கள் என்பதை மிகுந்த கவலையுடன் நாம் கோடிட்டுக்காட்ட விரும்புகிறோம்.

ஜெனிவா பேச்சுக்களின் பின்னர் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களில் சில - ஏற்கனவே உள்ள போர்நிறுத்த உடன்படிக்கையில் காணப்படாத தால் அவற்றை புதிய மாற்றங்களாக அவர் கூறியிருப்பது தவறான வாதமாகும்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தில் காணப்படும் விதிகளின் அடிப்படையிலேயே அனைத்து விடயங்களையும் நடைமுறைப்படுத்துவது தொடர்பாக விவாதித்தால் அந்த விதிகளை மாற்றிய தாக வெளியிடப்படும் கருத்துக்கள் உண்மைக்குப் புறம்பானவை.

ஒப்பந்தத்தில் காணப்படாத சில விடயங்கள் விவாதிக்கப்பட்டதால் அவை ஒப்பந்தத்தில் புதிதாக இணைக்கப்பட்டுள்ளதாக பொய்ப் பிரசாரங்களை முன்னெடுப்பது தவறானதாகும்.

ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்துடன் ஆறு சுற்றுப் பேச்சுக்கள் நடத்தப்பட்டு ஒவ்வொரு சுற்றுப் பேச்சுக்களின் முடிவிலும் கூட்டறிக்கை வெளியிடப்பட்டது.

இவையெல்லாம் போர்நிறுத்த உடன்பாட்டை மையப்படுத்தியதாக இருந்தபோதும் அதன் சரத்துக்களாக இணைக்கப்பட்டுள்ளதாக அர்த்தப்படுத்தப்படவில்லை. போர்நிறுத்த உடன்பாட்டை மாற்றியமைப்பதோ அல்லது திருத்தம் செய்வதோ மிகவும் முக்கியமான - ஒரு விடயமாகும். அப்படியொரு தேவையேற்பட்டால் இலங்கை ஜனாதிபதியும் விடுதலைப் புலிகளின் தலைவரும் நோர்வே வெளிவிவகார அமைச்சரும் அதில் கையொப்பமிடவேண்டும்.

சர்வதேச உடன்படிக்கை ஒன்றை கற்பனையானதும் எழுந்தமானத்திலுமான கருத்துக்களோடு இணைத்துக்கொள்ள முயன்றுள்ள எச்.எல்.டி.சில்வாவின் முயற்சி குறித்து அதிர்ச்சியடைகின்றோம் இதனால் எழக்கூடிய பின்விளைவுகளை அவர் உணர்ந்துகொள்ளவில்லை என்றுதான் கருதவேண்டியுள்ளது.

அரசியல் அழுத்தங்கள் காரணமாகவும், சிங்களக் கடும் கோட்பாளர்களைத் திருப்திப்படுத்தவும் அவர் மேற்கொள்ளும் இந்த முயற்சி சமாதான முன்னெடுப்புக்களுக்கு நிச்சயமாக அடித்தளம் அமைக்கப்போவதில்லை என்றும் அன்ரன் பாலசிங்கம் மேலும் தெரிவித்தார்.

இடமாற்றங்கள் ரத்து

கொழும்பு

எதிர்வரும் உள்ளூராட்சி சபை தேர்தல்கள் முடியும்வரை சகல அரச ஊழியர்களதும் இடமாற்றங்கள் பதவியுயர்வுகள் வெளிநாட்டுப் பயணங்கள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டிருப்பதாக அரசாங்கம் அறிவித்தது.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவின் அறிவுறுத்தலுக்கமைய பொதுநிர்வாக அமைச்சு இது தொடர்பான சுற்றறிக்கையை சகல அரச அலுவலகங்களுக்கும் அனுப்பியுள்ளது.

எனினும் பல சம்பவங்களில் நூற்றுக்கும் அதிகமான ஆசிரியர்கள் தேர்தல் அறிவிப்பின் பின்னர் இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடலை நோக்கி பீரங்கித் தாகுதல்

யாழ்ப்பாணம்

வடமராட்சி கிழக்கில் நேற்றுக் காலை கடற்படையினர் மேற் கொண்ட பீரங்கித் தாக்குதல் பயிற்சியால் ஆழ்கடலில் மீன்பிடித்தலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் அச்சத்தால் கரைதிரும்ப நேரிட்டது.

நேற்றுக்காலை 8 மணிமுதல் 9 மணிவரை ஆழ்கடல் பகுதியை நோக்கி கடற்படையினர் பீரங்கித் தாக்குதல் பயிற்சியில் ஈடுபட்டனர். இதனால் மாமுனை தொடக்கம் உடுத்துறை வரையான பகுதிகளிலிருந்து மீன்பிடிக்கச் சென்ற பெருந்தொகையான மீனவர்கள் அச்சமடைந்து இடைநடுவில் கரைதிரும்பினர்.

துணை....

தீவுச்சேனையில் கருணா குழுவினர் முகாம் அமைத்திருப்பதாகவும், அவர்கள் ஆயுதப்பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் விடுதலைப் புலிகள் தெரிவிக்கும் கருத்துக்கள் முழுச்சோடிப்புக் கதைகளே தவிர, அதில் எந்தவிதமான உண்மையும் இல்லை.

தீவுச்சேனை எமது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பிரதேசமாகும். அங்கு இராணுவத்தினரை தவிர எந்த விதமான ஆயுதக்குழுக்களும் இல்லை. அதேவேளை, எந்த விதமான துணைப் படையினருடனும் நாம் தொடர்புகளை பேணி வரவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

குடும்பப்....

உயிரிழந்தார். இவரது மகளான தங்கவேலு தயாளினி (வயது 21) காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஒரே காணியில் இருந்த இந்த இரு குடும்பங்களுக்கிடையில் நீண்டகாலமாக நிலவிவந்த தகராறு முற்றியதில் ஆத்திரமடைந்த பெண் தாயையும், மகளையும் வெட்டிக் காயப்படுத்தினார். பலத்த வெட்டுக்காயங்களுக்குள்ளான இருவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவேளை தாய் உயிரிழந்தார்.

மகள் வைத்தியசாலை அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தையடுத்து ஸ்தலத்துக்கு விரைந்த கோப்பாய் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டதுடன் வெட்டிக்கொலை செய்ததாகக் கூறப்படும் பெண்ணை கைதுசெய்தனர்.

இதேவேளை சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ்.மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் விசாரணையை மேற்கொண்டதுடன் சடலத்தை பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (82, 91, 110, 111)

முஸ்லிம் காங்கிரஸ் மீதான தடை உத்தரவு நீக்கம்!

கொழும்பு

உள்ளூராட்சி சபை வேட்பு மனு தயாரித்தல் மற்றும் கையெழுத்திடுவதற்கு மாவட்ட நீதிமன்றம்- சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவத்தின்மீது விதித்திருந்த இடைக்காலத்தடை உத்தரவு நீக்கப்பட்டது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப்ஹக்கீம் மற்றும் பொதுச்செயலாளர் சார்பாக நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டபோதே நீதிமன்றம் இந்தத் தீர்மானத்தை அறிவித்தது.

கொழும்பு மாவட்ட மேலதிக நீதிபதி தேவிகா தென்னக்கோன் முன்னிலையில் இந்த விடயங்கள் பரிசீலிக்கப்பட்ட போதே அவர் இந்த உத்தரவை பிறப்பித்தார். கடந்த பெப்ரவரி 15 ஆம் திகதி கொழும்பு மாவட்ட நீதிபதி கே.எச். சுமத்திரபால - முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் பொதுச்செயலாளருக்கு எதிராக இடைக் காலத்தடை உத்தரவு வழங்கப்பட்டிருந்தது குறிப்பிடத் தக்கது.

வாக்குச் சீட்டு அச்சிடும் பணியை தாமதிக்க நீதிமன்றம் உத்தரவு!

கொழும்பு

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்த உள்ளூராட்சி சபைகளுக்கான வாக்குச் சீட்டுகள் அச்சிடுவதை தாமதிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டது.

வத்தேகம நகரசபைக்கு தாக்கல் செய்த சுயேட்சைக்குழு ஒன்றின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டது.

இதனையடுத்து சுயேட்சைக் குழு மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல்செய்த மனுமீதான விசாரணை நடைபெற்றபோது - மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி வாக்குச் சீட்டுகள் அச்சிடும் நடவடிக்கை நாளை ஆரம்பமாக உள்ள நிலையில் அதனை இடைநிறுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

இடைநிறுத்தும் உத்தரவு ஒன்றை பிறப்பிக்காத நீதிமன்றம் தீர்ப்பு வழங்கப்படும்வரை வாக்குச் சீட்டு அச்சிடுவதை தாமதிக்குமாறு உத்தரவிட்டது. (01)

வீடுகளை ஒப்படைக்காத எம்.பி.களுக்கு அழைப்பாணை

கொழும்பு

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் உத்தியோக பூர்வ இல்லங்களை மீண்டும் ஒப்படைக்காத மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களை நீதிமன்றில் ஆஜராகுமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

ஜயலத் ஜெயவர்த்தன, பெ.சந்திரசேகரன், லஷ்மன் செனவிரத்ன ஆகியோர் தங்களுக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்களை உரிய முறையில் கையளிக்கவில்லை என அரசாங்க நிர்வாக அமைச்சின் நிறுவனப் பணிப்பாளர் நீதிமன்றில் மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தார்.

இதனை ஆராய்ந்த கொழும்பு நீதிவான் நீதிமன்றம் இந்த மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களையும் எதிர்வரும் ஏப்ரல் 25 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவிட்டது. (01)

ஐ.தே.க அங்கத்தவர் இருவர் சுதந்திரக் கட்சிக்குத் தாவல்!

கொழும்பு

ஐக்கிய தேசியக்கட்சியின் பொலநறுவ - லங்காபுர பிரதேச சபையின் முன்னாள் தலைவர் எம்.ரணசிங்க,உபதலைவர் எம்.என் அப்துல்ஜபார் ஆகிய இருவரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொண்டனர். இவர்கள் இருவரும் சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவிடம் கட்சியின் அங்கத்துவ பத்திரத்தை பெற்றுக்கொண்டனர். (01)

கிழக்கு ஆயுதக்குழுக்களின்...

களின்போது விடுதலைப் புலிகள் தெரிவித்ததை அடுத்து - அரசாங்கப் படைகள் தவிர்ந்த எந்தவொரு குழுவும் ஆயுதங்களுடன் செல்வதற்கு அனுமதிக்கப்போவதில்லை என்ற உறுதிமொழியை அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு வழங்கியிருந்தது.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள உடன்படிக்கையின் அடிப்படையில் தமது ஆயுதங்களைக் களைய முடியாது என கருணா கூறியிருப்பது தொடர்பாக ஹொக்கன்ட் கருத்து வெளியிடுகையில் -

இராணுவம் மறுதலிப்பான கருத்துக்களை வெளிப்படுத்தியிருக்கின்ற போதிலும் - கிழக்கு மாகாணத்தில் ஆயுதம் தாங்கிய கருணா குழு செயற்படுகின்றது என்பதை மேலும் உறுதிப்படுத்துவதாகவே கருணாவின் கருத்து அமைந்திருக்கிறது என அவர் தெரிவித்திருக்கின்றார்.

ஆயுதக்குழுக்களின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கவுள்ள கண்காணிப்புக்குழு - அது தொடர்பான அறிக்கையை ஏப்ரல் 19 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதிவரை நடைபெறவுள்ள அடுத்த சுற்றுப் பேச்சுக்களின்போது சமர்ப்பிக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 02.03.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.